حُقُوقُ العِبَادِ فِي الإِسْلَام

# இஸ்லாம் இயம்பும்

# இறையடியார் கடமைகள்

மௌலவி

M. அப்துர் ரஹ்மான்

பாஜில் பாகவி

# பொருளடக்கம்


எண். பக்கம்

1. பெற்றோருக்கு பிள்ளைகள் ஆற்றவேண்டிய கடமைகள் ........ 13
2. பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் ........ 18
3. கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் ........ 31
4. மனைவி கணவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் ........ 42
5. உற்றார் உறவினரை ஆதரித்து வாழ்தல் ........ 56
6. அண்டை வீட்டாருடன் நற்பண்புகள் ........ 64
7. ஆசிரியர்-மாணவர் கடமைகள் ........ 72
8. நண்பர்களின் கடமைகள் ........ 81
9. முதலாளி-தொழிலாளி கடமைகள் ........ 85
10. விற்பவர்-வாங்குபவர் பொறுப்புகள் ........ 91
11. கடன் கொடுப்பவர்-வாங்குவோர் கடமைகள் ........ 97
12. இஸ்லாமிய சகோதரத்துவத்தின் கடமைகள் ........ 101
13. முதியோர்-இளைஞர்கள் கடமைகள் ........ 106
14. பயணத்தோழர்களுக்கு உதவுதல் ........ 110
15. வாக்குறுதி, ஒப்பந்தம் நிறைவேற்றல், நம்பிக்கைப் பொருளை ஒப்படைத்தல் ........ 112
16. தலைவர்களின் பொறுப்புகள் ........ 121
17. நீதி வழங்குதல் ........ 129
18. பலவீனமானவர்களுக்கு உதவுதல் ........ 136
19. மனிதநேயப் பண்புகள் ........ 146
20. தமக்குத்தாம் ஆற்ற வேண்டிய கடமைகள் ........ 152




# பெற்றோருக்கு பிள்ளைகள் ஆற்ற வேண்டிய கடமைகள்

அல்லாஹ் தன் அருள்மறை திருக்குர்ஆனின் பனூ இஸ்ராயீல் அத்தியாயத்தில் பெற்றோரிடம் பிள்ளைகள் கடைபிடித்து வரவேண்டிய நன்னெறிகளை பின்வருமாறு அழகாக எடுத்தியம்புகிறான்.

உன் இரட்சகன் தன்னையே தவிர வேறு எவரையும் நீங்கள் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்து வருதல் வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளான். அவ்விருவரோ, அவ்விருவரில் ஒருவரோ உம்மிடம் முதுமையை அடைந்துவிடுவாராயின், அவ்விருவரை 'சீ' என்று கூறாதீர்! அவ்விருவரிடம் சங்கையான சொல்லாக சொல்வீராக! மேலும் அவ்விருவருக்கும் பாசத்தால் பணிவு என்னும் இறக்கையை தாழ்த்துவீராக! மேலும் (உம் இரட்சகனை அழைத்து) என் இரட்சகனே! நான் சிறு பிள்ளையாக இருந்தபொழுது என்னை எவ்வாறு அவ்விருவரும் (கிருபையுடன்) வளர்த்தார்களோ அதுபோல், அவ்விருவர் மீதும் கிருபை செய்வாயாக! எனக் கேட்பீராக!

(அல்குர்ஆன் 17-23,24)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அறிவிக்கிறார்கள்: செயற்களில் சிறந்த செயல் யாது? என நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள் தொழுகையை அதன் நேரத்தில் தொழுது வருவது எனப் பகர்ந்தார்கள். பின்னர் எது? என நான் வினவினேன். பெற்றோருக்கு நன்மை செய்து வருவது எனப் பகர்ந்தார்கள். பின்னர் எது? என நான் வினவினேன். இறைவனின் பாதையில் ஜிஹாது எனும் அறப்போர் புரிவது எனப் பகர்ந்தார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

ஒரு மனிதன் இறைவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகளில் மிகச் சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்தது

தொழுகை என்பதையும், இறையடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் மிகச் சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்தது பெற்றோருக்கு நன்மை செய்து வருவதாகும் என்பதையும் இந்நபிமொழி எடுத்தியம்புகிறது.

தனக்கு நன்றி செய்து வருவது போன்றே, தனக்கடுத்தாற் போல் மனிதர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு நன்றி செலுத்தி வரவேண்டுமென பின்வரும் ஸூரத்து லுக்மானின் வசனத்தில் அல்லாஹ் எடுத்தியம்புகிறான்.

தன் பெற்றோருக்கு நன்மை செய்து வருமாறு மனிதனுக்கு நாம் உபதேசம் செய்தோம். அவனது தாய் அவனை பலவீனத்தின் மீது பலவீனமாக சுமந்திருந்தாள். மேலும் அவனுக்கு பால்குடி மறத்தல் இரண்டு ஆண்டுகளில் உள்ளது (ஆகவே) எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே மீளுதல் உள்ளது.

**(அல்குர்ஆன் 31-14)**

பிள்ளைகள் தங்களை ஈன்றெடுத்த தாய் தந்தைக்கு எவ்வளவுதான் நன்றிக்கடன்கள் செய்தாலும் அவை ஈடாகாது.

ஒருவர் தம் தாயை இடுப்பில் சுமந்தவராக திருக்கஃபாவை வலம் வந்து கொண்டிருந்தார். அவர் அண்ணல் நபியவர்களிடம் "இறைத்தூதரே! நான் இவ்வாறு செய்வதன் மூலம் என் தாயின் கடமைகளை செய்துவிட்டவனாகி விடுவேனா? என வினவினார். அதற்கவர்கள் "உம் தாய் (உம்மை ஈன்றெடுக்கும் பொழுது பிரசவ வேதனையில்) விட்ட ஒரு மூச்சிற்கு இது ஈடாகாது எனப் பகர்ந்தார்கள்.

**(தப்ஸீர் இப்னு கதீர் - முஸ்னது பஜ்ஜார்)**

அல்லாஹ்வின் திருப்தி பெற்றோரின் திருப்தியில் உள்ளது. அல்லாஹ்வின் கோபம் பெற்றோர் கோபத்தில் உள்ளது என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். **(ஸுபுலுஸ்ஸலாம்)**

எவர் தம் ஆயுளிலும், இரணத்திலும் அல்லாஹ் அதிகரிக்க வேண்டுமென விரும்புகிறாரோ அவர் தம் பெற்றோருக்கு நன்மை செய்தும் உறவினரைச் சேர்த்தும் வாழட்டும் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

**(அறிவிப்பாளர் : அனஸ் (ரலி), பைஹகீ-துர்ருல் மன்ஸூர்)**

தாயின் காலடியில் சுவனம் உள்ளது என ஒரு ஹதீஸிலும், (அஹ்மது, நஸயீ) தந்தையின் துஆ ஒப்புக்கொள்ளப்பட்டதாகும் என ஒரு ஹதீஸிலும் (திர்மிதி) அண்ணல் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

பெற்றோருக்கு நன்மை செய்து வருதல் ஹஜ், உம்ரா, ஜிஹாத் போன்ற இஸ்லாத்தின் உயர் வணக்கங்களுக்கு இணையான நன்மைகளைப் பெறுகிறதென்ற கருத்துக்கள் ஹதீஸ்களில் காணக்கிடக்கின்றன.

பெற்றோரின் மாண்புகள் குறித்து அல்லாஹ்வின் அருள்மறை வசனங்களும், அண்ணல் நபியவர்களின் மணிமொழிகளும் அதிகமதிகம் வந்துள்ளன.*

பெற்றோருடன் அழகிய சகவாசம் கொண்டு வாழ்தல் பிள்ளைகளின் பொறுப்பாகும். உலகிலேயே எம் அழகிய சகவாசத்திற்கு அதிகத்தகுதி பெற்றவர் யார்? என ஒரு தோழர் நபியவர்களிடம் வினவியபொழுது உம் தாய் எனப் பகர்ந்தார்கள். அவர் மேலும் இருமுறை, பின்னர் யார்? என வினவியபொழுதும் உம் தாய் எனப். பகர்ந்தார்கள். பின்னர் யார் என அவர் நான்காவது முறையாக வினவியபொழுது உம் தந்தை எனக் கூறினார்கள். **(புகாரி, முஸ்லிம்)**

நபி ஈஸா (அலை) அவர்கள் தாயின் மடியில் கைக் குழந்தையாக இருந்தபொழுதே தன்னை அறிமுகம் செய்து பேசினார்கள். அப்பொழுது அவர்கள் நான் உயிருடனிருக்கும் காலமெல்லாம் தொழுகையையும், ஜகாத்தையும் நிறைவேற்றிவருமாறு அல்லாஹ் எனக்கு கட்டளை

---

★மேலும் விளக்கங்களுக்கு எமது 'பெற்றோரின் சிறப்பு' எனும் நூலைக் காண்க!

யிட்டுள்ளான். மேலும் என் தாய்க்கு நன்மை செய்து வருபவராக என்னை ஆக்கியுள்ளான். மூதேவியான பெருமை அடிப்பவனாக என்னை அவன் ஆக்கவில்லை எனக் கூறினார்கள். இதனை அல்லாஹ் ஸூரத்து மர்யமில் எடுத்தியம்புகிறான்.

பெற்றோர் தங்களையும் தங்கள் உழைப்புகளையும், சிந்தனைகளையும், உறக்கங்களையும், செல்வங்களையும், வாலிபப் பருவங்களையும் தங்கள் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதற்காக அர்ப்பணிக்கின்றனர். அவர்களது உண விற்காக, ஆரோக்கியத்திற்காக, கல்விக்காக, எதிர்கால நல் வாழ்விற்காக அல்லும் பகலும் அயராது பாடுபடுகின்றனர்.

காலைக் கதிரவன் உதிக்கும்முன் எழுந்து வியாபாரத் திற்குச் சென்று இரவு நெடுநேரம் கழித்து வீடு திரும்பும் வியாபாரி முதல், பகல் வேளையெல்லாம் பாடுபடும் பாட்டாளி வரை, கடும் பனியிலும், கடும் வெயிலிலும் நிலத்தை உழுது நீர் பாய்ச்சும் விவசாயி முதல், கடுங் குளிரையும் சுழற்காற்றையும் பொருட்படுத்தாது இரவின் இருளிலும் ஆழ்கடல் வரை சென்று மீன் பிடிக்கும் மீனவர் வரை அனைவரிடமும் "நீங்கள் ஏன் இவ்வாறு கஷ்டப் படுகிறீர்கள்? என வினவினால் 'எங்கள் இதயக்கனிகளான - இதயத்துண்டுகளான பிள்ளைகளை காப்பாற்றுவதற்காகத் தான்" என விரைந்து பதிலளிப்பர்.

இவ்வாறு பெற்றோரின் பற்பல தியாகங்கள் அர்ப் பணிப்புகளின் பின்னணியில் உருவான குழந்தைகள், தங்களது காலத்தில் தங்கள் பெற்றோரிடம் நன்முறையில் நடக்கக் கடமைப்பட்டுள்ளனர். அவர்களது நலனுக்காக தாங்கள் எதிர்படும் சிற்சில சிரமங்களை பொருட்படுத்தாது அவர்களது மாண்பு போற்றி அவர்களது நல்லாசிகளையும் நற்பிரார்த்தனைகளையும் பெறக் கடமைப்பட்டுள்ளனர்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடம் பாசமும், இரக்கமும் காட்டி வரவேண்டும். அவர்களிடம் இதமாகவும், இனிமை



யாகவும் பேசுதல் வேண்டும். அவர்களுக்கு சிறந்த உணவு, உடை, இருப்பிட வசதிகளை இயன்றளவு ஏற்படுத்தித் தர வேண்டும். அவர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து கொடுத்து அவர்களது உடல் நலத்தைப் பேண வேண்டும். அவர்களது முறையான சிபாரிசுகளை ஏற்று ஆவனபுரிதல் வேண்டும். அவர்களுக்கு மனமுவந்து பணிவிடைகள் செய்து வரவேண்டும். அவர்கள் உறவினர்களையும், நண்பர் களையும் விருந்தினர்களையும் கண்ணியப்படுத்தவேண்டும். அவர்களது இம்மை மறுமையின் நற்பேறுகளுக்காக வல்ல நாயனான அல்லாஹுதஆலாவிடம் துஆ இறைஞ்சி வருதல் வேண்டும். குறிப்பாக, "ரப்பிர்ஹம்ஹுமா கமா ரப்பயானி ஸாரா" என் இரட்சகனே! நான் சிறுபிள்ளையாக இருந்த பொழுது அவ்விருவரும் (தாயும், தந்தையும்) என் மீது இரக்கம் காட்டியதுபோல், நீ அவ்விருவர் மீது இரக்கம் காட்டுவாயாக! என்ற துஆவை அதிகம் ஓதி வரவேண்டும். இதுவே பிள்ளைகள் பெற்றோருக்கு நன்மை செய்து வருவதின் சுருக்கமான விளக்கமாகும்.

பெற்றோரை சொல்லால், செயலால், சமிக்ஞையால் வேதனைப்படுத்துவது மாபெரும் பாவமாகும். அவர்களை கவலையில் ஆழ்த்துதல், அழவைத்தல் போன்றவை அவர் களை நோவினை செய்வதில் அடங்கியவையாகும். பெற் றோரை வேதனைப்படுத்திய வரை அவரது மரணத்திற்கு முன் உலகிலேயே அல்லாஹ் சோதிக்கக்கூடும் என்ற அண்ணலாரின் எச்சரிக்கையை கவனத்திற்கொள்ளுதல் அவசியமாகும்.

இறைத்தூதரான நபிமார்கள், தங்கள் பெற்றோர்களுக்கு அல்லாஹுதஆலாவிடம் எவ்வாறு பிழை பொறுப்பு இறைஞ்சினர் என்பதை அல்லாஹ்வின் அருள்மறை எடுத்துரைக்கிறது.

ஹஜ்ரத் இப்ராஹிம் (அலை) பின்வருமாறு பிரார்த்தித் தார்கள்:

என் இரட்சகனே! எனக்கும், என் பெற்றோருக்கும், நன்னம்பிக்கையாளர்களுக்கும் கணக்குகள் நடைபெறும் கியாமத் நாளில் மன்னிப்பை அருள்வாயாக!

(அல்குர்ஆன் 14:40,41)

ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்கள் பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்:

என் இரட்சகனே! எனக்கும், என் பெற்றோருக்கும், நன்னம்பிக்கை கொண்டவராக என் இல்லத்தில் நுழைந்த வருக்கும், நன்னம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், நன்னம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் மன்னிப்பை அருள்வாயாக!

(அல்குர்ஆன் 71-28)

## பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்

பெற்றோர், தங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு நல்ல பொருள் தரும் அழகிய பெயர்களைத் தேர்ந்தெடுத்துச் சூட்டுதல் அவசியமாகும்.

குழந்தைக்கு நற்பெயரிடுதல் அதன் நல்வாழ்வின் முதற் படியாகும். அதன் சிதேவித்தனத்தின் முதல் அடையாளச் சின்னமாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபுத்தர் தாஹ் (ரலி) அறிவிக்கிறார்கள்: கியாமத் நாளில் நீங்கள் உங்களது பெயர்கள் கொண்டும், உங்கள் பெற்றோர்கள் பெயரைக் கொண்டும் அழைக்கப்படுவீர்கள். ஆகவே, உங்கள் பெயர்களை அழகாக்கிக் கொள்ளுங்கள்.

(அஹ்மது, அபூதாவூது)

'அப்துல்லாஹ்', 'அப்துர்ரஹ்மான்' என்ற பெயர்களைச் சூட்டுவது, அல்லாஹுதஆலாவிற்கு மிகப் பிரியமானதாகும் என்பதை பின்வரும் நபிமொழி எடுத்துரைக்கிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அப் துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: உங்கள்



பெயர்களில் அல்லாஹுதஆலாவிற்கு மிகப்பிரியமானது, 'அப்துல்லாஹ்' (அல்லாஹ்வின் அடிமை), 'அப்துர்ரஹ்மான்' (மிகக் கிருபையுள்ளவனான அல்லாஹ்வின் அடிமை) என்ற பெயர்களாகும்.

(முஸ்லிம்)

அடுத்து நபிமார்களின் பெயர்களைக் கொண்டு பெயர் சூட்டுவது சிறப்பாகும். நபிமார்களின் பெயர்களைக் கொண்டு பெயர் சூட்டிக் கொள்ளுங்கள் என மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(மிஷ்காத்)

நபியவர்கள் தங்கள் புதல்வர்களில் ஒருவருக்கு, தங்கள் மூத்த தந்தை நபி இப்ராஹீம் (அலை) அவர்களை நினைவு படுத்தும் விதத்தில் 'இப்ராஹீம்' எனப் பெயர் சூட்டினார்கள்.

நபிமார்களின் தலைவரான நமமுடைய நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் திருப்பெயரைக் கொண்டு 'முஹம்மது', 'அஹமது' எனப் பெயர் சூட்டுவது மிகச் சிறப்பாகும்.

என் பெயரைக் கொண்டு பெயர் சூட்டிக் கொள்ளுங்கள் (எனினும் அபுல் காசிம் என்ற) எனது குன்யத்* பெயரைக் கொண்டு பெயர் சூட்டிக் கொள்ளாதீர்கள் என மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

அபுல்காசிம் என்ற அவர்களது குன்யத் பெயரைக் கொண்டு பெயர் சூட்டுவது சம்பந்தமாக வந்துள்ள வேறு பல ஹதீஸ்களையும் காரணங்களையும் கவனித்து உலமாக் களிடையே அப்பெயர் சூட்டுவதில் கருத்து வேறுபாடு உள்ளது.

மேலும் நபிதோழர்கள், அவர்களின் தோழர்கள், இமாம் கள், மார்க்க மேதைகள், நல்லோர்களது பெயர்களைத் தேர்ந்தெடுத்துச் சூட்டுதல் நலமாகும்.

---

★"குன்யத்" என்றால் அபு அல்லது உம்மு என்பதைக் கொண்டு துவங்கும் பெயராகும்.

நல்ல பொருள் தராத - பொருத்தமற்ற பெயர்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மாற்றி அமைத்துள்ளார்கள்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு புதல்வியின் பெயர் ஆஸியா - மாறு செய்பவள் என்பதாக இருந்தது. அப் பெயரை நீக்கிவிட்டு அவருக்கு ஜமீலா - அழகு நிரம்பிய வள் எனப் பெயர் சூட்டினார்கள். **(முஸ்லிம்)**

நபியவர்களை சந்திக்க வந்த ஒரு தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்த ஒருவரிடம், உம் பெயர் என்ன என நபியவர்கள் வினவினார்கள். அதற்கவர் தன் பெயர் அஸ்ரம் - துண்டிப்பவர் எனக் கூறினார். அதற்கவர்கள் (இப்பொழுது முதல்) நீர் அஸ்ரம் அல்ல மாறாக நீர் (உமது பெயர்) ஜுர்ஆ - விளைச்சல் என்பதாகும் எனக் கூறினார்கள்.

**(அபூதாவூது)**

மேலும் ஆஸ் - மாறு செய்பவர், ஹுராப் - தூரமான வர் ஷிஹாப் - நெருப்பு ஜுவாலை போன்ற பெயர்களையும் நபியவர்கள் மாற்றி அமைத்தார்கள். **(மிஷ்காத்)**

ஹஜன்-கவலை, ஹர்ப்-போர், முர்ரா-கசப்பு போன்ற பெயர்களையும் அண்ணலார் வெறுத்துள்ளார்கள்.

**(மிஷ்காத்)**

தந்தை தன் பிள்ளைக்குச் செய்ய வேண்டிய கடமை யாகிறது, அவரது பெயரை அழகாக வைப்பதும், அவருக்கு பால் புகட்டுபவரை நல்லவராகத் தேர்ந்தெடுப்பதும், அவரது ஒழுக்கத்தை அழகுபடுத்துவதுமாகும் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் கூறியுள்ளார்கள். **(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

பெற்றோர் தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும், உடல் நலத்தையும் நன்கு பேணி வரவேண்டும். அதற்கு அவர்களுக்கு அழகிய நற்கூலிகளை அல்லாஹ் மறுமையில் வழங்குகிறான்.

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)



அறிவிக்கிறார்கள்: தன் குழந்தைக்கு சிறு பிராயத்தில் ஒரு முறை தண்ணீர் புகட்டியவருக்கு கியாமத் நாளில் 'கவ்தர் என்னும் சுவன நீரிலிருந்து எழுபது முறை அல்லாஹ் தண்ணீர் புகட்டுவான். **(அபூநுஅய்ம்)**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்கள்: மூன்று பெண் பிள்ளைகள் எவருக்கு இருந்து, அவர் அப்பிள்ளைகளை ஆதரித்து, (அவர்களுக்கு தேவையானதை வழங்கி) அவர் களுக்கு அவர் போதுமாகி, அவர்கள் மீது அவர் இரக்கம் காட்டி வருவாரேயானால், நிச்சயமாக அவருக்கு சுவனம் உறுதியாகிவிட்டது. அப்பொழுது நாயகத்தோழர்கள், 'அல்லாஹ்வின் திருத்தூதரே! இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தால் (இந்நன்மை கிடைக்குமா) என வினவினார்கள். அதற்கவர்கள் (ஆம்) இரு பெண் பிள்ளைகள் இருந்தாலும் தான் எனப் பகர்ந்தார்கள். **(அதபுல் முப்ரது, அஹ்மது)**

இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகிறார்கள்: ஒரு பெண் பிள்ளை இருந்தாலுமா? என அவர்கள் கேட்டிருப்பார் களானால், நபியவர்கள் 'ஆம்' எனக் கூறியிருப்பார்கள்.

**(ஸரஹுஸ்ஸுன்னா)**

நபியவர்கள் நவின்றதாக அபூஸயீதில் குத்ரி (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒருவருக்கு மூன்று பெண் பிள்ளை களோ அல்லது மூன்று சகோதரிகளோ இருந்து அவர் களுக்கு அவர் உபகாரம் செய்து வருவாரேயானால் அவர் சுவனில் நுழைந்தே தவிர வேறில்லை.. **(அதபுல் முப்ரது)**

அரபு மக்கள் பெண் குழந்தைகள் பிறப்பதைக் கேவல மாகக் கருதி கொண்டிருந்த கால கட்டத்தில் - அவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை பிறந்ததென சுபச் செய்தி கூறப் பட்டால், அவரது முகம் சினத்தால் கறுத்துவிடும் என அல்லாஹ், "ஸூரத்துல் நஹ்லுவில்" எந்தக் காலத்தைப் பற்றி வர்ணித்தானோ அப்படிப்பட்ட காலத்தில் - ஒரு சில அரபுக் கோத்திரத்தார் தங்கள் பெண் குழந்தைகளை

உயிருடன் புதைத்து வந்த காலகட்டத்தில் - அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பெண் குழந்தைகளின் பெருமை போற்றி அவர்களைப் பெற்று வளர்ப்பதின் மாண்புகளை மேற்கண்டவாறு எடுத்துரைத்தார்கள்.

தம் பிள்ளைகளால் பெற்றோர் படும் சிரமங்கள், கஷ்டங்கள் அவர்களை நரகைவிட்டுத் தடுக்கும் கேடயங்களாக அமைகின்றன என்ற கருத்தை பின்வரும் ஹதீஸ் எடுத்தியம்புகிறது.

அன்னை ஆயிஷா (ரலி) கூறியதாக உர்வத்துபின் ஜுபைர் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு பெண்மணி, தன் இரு பெண் குழந்தைகளுடன் என்னிடம் வந்து, ஏதேனும் கொடுக்குமாறு கேட்டது. அப்பொழுது என்னிடம் ஒரேயொரு பேரீத்தம்பழத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. நான் அதனை அப்பெண்மணியிடம் கொடுக்கவே, அப்பெண்மணி அதனை இரண்டாகப் பிளந்து, தன் இரு பெண் குழந்தைகளுக்கும் கொடுத்தது. தான் எதுவும் உண்ணவில்லை. பின்னர் எழுந்து தன் இரு பெண் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு அப்பெண்மணி புறப்பட்டது. நான் இதனை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்ததும், அவர்களிடம் எடுத்துரைத்தேன். அப்பொழுது அவர்கள் கூறினார்கள்: யார் இப்பெண் பிள்ளைகளின் காரணமாக ஏதேனுமொன்றைக் கொண்டு சோதிக்கப்பட்டு (அப்பொழுதும்) அவர்களுக்கு நன்மை செய்து வருவாராயின் அவர்கள் அவரை நரகைவிட்டுத் தடுக்கும் திரையாகத் திகழுவர் **(புகாரி, முஸ்லிம்)**

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு நான்கு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களை, அவர்கள் தங்களது நபித்துவத்தின் எத்தனையோ பெரும் பொறுப்புகளுக்கும், கடுமையான பணிகளுக்கும், சிரமங்களுக்கும் மத்தியிலும், அன்போடும் பாசத்தோடும் வளர்த்து, பொருத்தமான மணாளர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள்.



எப்பொழுதும் அவர்கள் மீது அன்பும் பாசமும் செலுத்தி வந்தார்கள். அவர்கள் வெளியூர் பிரயாணம் புறப்பட்டுச் சென்றால், இறுதியாக தங்கள் இளைய புதல்வி பாத்திமாவிடம் சென்று விடைபெற்றுச்செல்வார்கள். பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தால் பாத்திமாவின் இல்லத்திற்கே முதன் முதலில் வருவார்கள். பின்னரே தங்கள் மனைவியர் இல்லங்களுக்கு செல்வார்கள்.

குழந்தைகள் மழலைமொழி பேசத் துவங்கியதும், 'லாயிலாஹ இல்லல்லாஹு', முஹம்மதுர் ரஸுலுல்லாஹி' எனும் திருக்கலிமாவை அவர்களுக்கு சொல்லித் தரவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: 'லாயிலாஹ இல்லல்லாஹு' எனும் கலிமாவைக் கொண்டு உங்கள் குழந்தைகளின் பேச்சைத் துவக்குவீராக! **(ஹாகிம்)**

பின்னர் ஈமான், இஸ்லாத்தின் விளக்கத்தையும், அல்லாஹ்வின் அருள்மறை திருக்குர்ஆனையும், அண்ணல் நபியவர்களின் மணிமொழிகளையும், முக்கிய மஸாயில்களையும் அவர்களுக்கு படிப்படியாகக் கற்றுத்தரவேண்டும்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளின் உணவு, உடை விஷயத்தில் பரிசுத்தத்தைப் பேணிக்கொள்ள வேண்டும். "பரிசுத்தம் ஈமானில் பாதியாகும்" என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

குழந்தைகள் ஏழு வயதடையும் வரை நல்லொழுக்கப் பயிற்சியுடன், அவ்வப்பொழுது சில நேரங்களில் அவர்களுடன் அன்புப் பாசத்துடன் விளையாடி வருவது நலமாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஏழு வயது (வரை) குழந்தையுடன் விளையாடுவீராக! (அதற்கடுத்த) ஏழு வருடங்கள் அதற்கு கல்வி கற்றுத் தருவீராக! (அதற்கடுத்த)

ஏழு வருடங்கள் அவருடன் சகோதரராகப் பழகுவீராக!

**(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

குழந்தைகளின் முதல் ஏழு ஆண்டு காலம் விளையாட்டுப் பருவமாகும். இப்பருவத்தில் குழந்தைகள் விளையாட்டின் பக்கம் மிகத் தேவையாகின்றன. அவர்களுக்கு விளையாட்டு அப்பருவத்தில் தண்ணீரும், காற்றும் போன்றாகும்.

குழந்தைகளுக்கு தாயும் தந்தையும் மிகப் பிரியமானவர்கள். அவர்கள் அவர்களுடன் விளையாடினால் மிகுந்த மகிழ்ச்சியை உணருவார்கள். குழந்தைகளுக்கு ஏற்படும் மகிழ்ச்சி, அவர்களது ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

குழந்தைகள் ஏழு வயதை அடைகிற பொழுது 'தம்யீஜ்' என்னும் ஓரளவு விளக்க வயதை அடைகின்றன. அதனாலேயே அவ்வயதை அடைந்ததும் சிறப்புகளின் பாதையான சீர்மிகு தொழுகையை அவர்களுக்கு பயிற்றுவிக்குமாறு இஸ்லாம் போதனை செய்கிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: உங்கள் குழந்தைகள் ஏழு வயதை அடைந்துவிட்டால் தொழுகையை தொழுமாறு ஏவுங்கள். அவர்கள் பத்து வயது அடைந்துவிட்டால் அதனை விடுவதின் மீது (லேசாக) அடியுங்கள். அவர்களுக்கு மத்தியில் படுக்கையில் பிரித்து வையுங்கள்.

**(அபூதாவூது, ஹாகிம்)**

குழந்தைகள் ஏழு வயதடைந்ததும் முழு அளவில் கல்வி கற்றுக் கொடுக்கத் துவங்க வேண்டுமென்றும், பதினான்கு வயதுக்கு மேல் அவர்கள் பருவமெய்தி விடுவதால், அவர்களுடன் சகோதரர் போன்று பழகி நல்லறிவுகளை எடுத்துணர்த்தி வரவேண்டுமென்று மேற்காணும் நபிமொழி எடுத்துக்கூறி, வளர்ப்பின் படிப்படியான நிலைகளை விளக்குகிறது. இருபத்தியொரு வயதில் அவர்கள் கல்வியறிவு பெற்று, பக்குவ நிலையை பெறுவதற்கு ஆயத்தம் ஆகிவிடு



வதால், பின்னர் அவர்களே தங்கள் பெற்றோரை அணுகி ஆலோசனைகள் பெற்றுக் கொள்வர்.

குழந்தைகள் விஷயத்தில் முக்கியத்துவம் கொடுப்பதும், அவர்களின் மீது பாசத்தைப் பொழிவதும், அவர்களிடம் புன்சிரித்து மகிழ்வதும் அன்பொழுகப் பேசுவதும் பெற்றோர்களிடம் பிள்ளைகளுக்குள்ள உரிமைகளாகும்.

நபித்தோழர் அனஸ் (ரலி) கூறுகிறார்கள்: நபியவர்களை விட தமது குடும்பத்தினரின் மீது அதிக பாசமும், கிருபையும் உள்ளவரை நான் பார்த்ததில்லை. அவர்கள் குழந்தை இப்ராஹிம், அதன் செவிலித்தாய் வசம் இருந்தது. அவர்கள் அக்குழந்தையிடம் செல்வார்கள். அதனை எடுத்து அதற்கு முத்தம்கொடுப்பார்கள். பின்னர் அங்கிருந்து திரும்புவார்கள். அக்குழந்தை இப்ராஹிம் (பின்னர்) மரணமடைந்து அவர்களின் முன் வைக்கப்பட்டிருந்ததை நான் பார்த்துள்ளேன். அப்பொழுது அவர்களது இரு கண்களும் கலங்கி கண்ணீரை உகுத்தன. உள்ளம் கவலையுறுகிறது. (எனினும்) அல்லாஹ் பொருந்திக் கொள்ளும் வார்த்தைகளைத் தவிர வேறெதையும் நாம் கூற மாட்டோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இப்ராஹிமே உன் (பிரிவின்) மீது நிச்சயமாக நாங்கள் மிக்க கவலையடைந்தவர்களாக உள்ளோம்" எனக் கூறினார்கள்.

**(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்த பொழுது அவர்கள் அருமைப் பேரக் குழந்தை ஹஸன் அங்கு வந்தார். அப்பொழுது அவர்கள் ஸஜ்தாவில் இருந்தார்கள். உடனே அவர் அவர்களது முதுகின் மீது ஏறிக்கொண்டார். அவர் முதுகைவிட்டு இறங்கும்வரை அவர்கள் ஸஜ்தாவில் தாமதித்தார்கள். பின்னர் அவர்கள் தொழுகையை நிறைவு செய்ததும் தோழர்களில் சிலர் அல்லாஹ்வின் திருத்தூதரே! தாங்கள் இன்று ஸஜ்தாவை நீளமாக்கிவிட்டீர்களே! என வின

வினார்கள். அதற்கவர்கள் என் பிள்ளை என் மீது சவாரி செய்துவிட்டார். அவரை உடனே இறக்கிவிடுவதை நான் வெறுத்தேன் எனப் பகர்ந்தார்கள். நபியவர்கள் தங்கள் பேரர்கள் ஹஸன், ஹுஸைன் இருவரையும் பார்த்து, நான் உங்கள் இருவரின் ஒட்டகை என அன்போடு கூறுவார்கள்.

(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

யஃலாபின் முர்ரா (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நபியவர்களுடன் அவர்கள் தோழர்கள் ஒரு விருந்திற்கு சென்று கொண்டிருந்தார்கள். (வழியில்) தெருவில் ஹுஸைன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது நபியவர்கள் கூட்டத்தினரை விட்டு முன் சென்று (ஹுஸைனை அழைத்து) தங்கள் இரு கரங்களை விரித்தார்கள். குழந்தை இங்குமங்கும் விரண்டோடியது. நபியவர்கள் அதற்கு சிரிப்புக் காட்டிப் பிடித்துவிட்டார்கள். பின்னர் தங்கள் ஒரு கரத்தை குழந்தையின் தொண்டைக்குழிக்கு கீழும், மற்றொரு கரத்தை அதன் தலையிலும் வைத்து அதற்கு முத்தம் கொடுத்தார்கள். மேலும் கூறினார்கள்: ஹுஸைன் என்னில் நின்றுமுள்ளார். நான் ஹுஸைனில் நின்றுமுள்ளேன். ஹுஸைனை நேசிப்பவரை அல்லாஹ் நேசிப்பான். ஹுஸைன் பேரர்களில் நின்றுமொருவர்.

(இப்னுமாஜா)

ஒருமுறை கலீஃபா ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முத்தம் கொடுத்தார்கள். அப்பொழுது அவர்களது அரசுப் பிரதிநிதிகளிலொருவர், எனக்கு பத்துக் குழந்தைகள் உள்ளனர். அவர்களில் எவருக்கும் நான் முத்தம் கொடுத்ததில்லை எனக் கூறினார். அதற்கு உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ் தன் அடியார்களில் இரக்கத்தன்மை யுடையவர்கள் மீதே இரக்கம் காட்டுகிறான் எனக் கூறினார்கள். பின்னர் அரசுப் பிரதிநிதிகள் பட்டியலிலிருந்து அவரை நீக்கிவிட்டார்கள். தம் குழந்தைகள் மீதே இரக்கம் காட்டாத இவர், எவ்வாறு தம் பிரஜைகள் மீது இரக்கம்



காட்டப் போகிறார் எனக் கூறினார்கள்.

(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

பெற்றோர் தம் பிள்ளைகள் மாறு செய்யும் நேரங்களில் கோபப்பட்டு அவர்கள் மீது தீய பிரார்த்தனை வார்த்தைகளை கூறிவிடாது நிதானத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நபியவர்கள் நவின்றதாக இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள். உங்கள் பிள்ளைகள் மீது தீய பிரார்த்தனை செய்யாதீர்கள்! (ஒருவேளை) அது ஒப்புக்கொள்ளப்பட்டுவிடும்.

(அஹ்காமுன் நிஸா)

பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளித்து வருவதின் அவசியத்தையும், மாண்பையும் பல்வேறு நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன. நம் துஆவில் "ரப்பனா ஹப்லனா மின் அஜ்வாஜினா, வதுர்ரிய்யாத்தினா குர்ரத்த அஃயுனின்" எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியரிலும் எங்கள் குழந்தைகளிலும் கண் குளிர்ச்சியை எங்களுக்கு அருள்வாயாக! எனக்கூறுகிறோம். இப்பிரார்த்தனையை அல்லாஹ் தன் அருள்மறையில் நமக்குக் கற்றுத் தருகிறான். ஆகவே நம் குழந்தைகளில் நாம் கண் குளிர்ச்சியைப் பெற வேண்டுமானால், மறுமையில் அவர்கள் சுவனப் பூங்காக்களில் உலவுவதைக் கண்டு மகிழவேண்டுமானால், அவர்களுக்கு சிறு வயதிலிருந்தே தொழுகை உள்பட நல்லொழுக்கப் பயிற்சிகளை நாம் அளித்துவரவேண்டும். மேலும் அல்லாஹ் தன் அருள்மறையில் "உங்களையும் - உங்கள் குடும்பத்தாரையும் நரக நெருப்பை விட்டு பாதுகாத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறுகிறான்.

அழகிய ஒழுக்கத்தைவிட சிறந்ததோர் செல்வத்தை ஒரு தந்தை தன் பிள்ளைக்கு அளிக்கப்போவதில்லை.

(திர்மிதி, பைஹகி)

ஒருவர் தம் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் பயிற்றுவிப்பது, (பல) மரக்கால் (தானியங்கள்) தர்மம் செய்வதை விடச் சிறந்ததாகும். (திர்மிதி)

உங்களது பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் நன்மையைக் கற்றுக் கொடுங்கள். அவர்களுக்கு நல்லொழுக்கம் பயிற்றுவியுங்கள், (அப்துர்ரஜ்ஜாக்)

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒருவர், தம் மகன் தமக்கு வேதனை தருவதாக முறையிட்டபொழுது, அவர் மகனை அழைத்து விசாரித்தார்கள். அப்பொழுது அவர் கலீஃபா அவர்களே! என் தந்தை என் பெயரை அழகாக வைக்கவில்லை. என் தாயாருடன் நன்முறையில் நடக்கவில்லை. எனக்கு அழகிய நல்லொழுக்கங்களை போதிக்கும் திருக்குர்ஆனை கற்றுக்கொடுக்கவில்லை. (அதனாலேயே தன்னில் இத்தவறுகள் நிகழ்கின்றன) எனக் கூறினார். அதனை கேட்ட கலீஃபா அவர்கள், தந்தையைப் பார்த்து, நீயே அவருக்கு (முதலில்) வேதனையளித்துவிட்டு, பிறகு என்னிடம் வந்து முறையிடுகிறீரா! எனக் கேட்டார்கள்.

(அஹ்பாருல் ஆலமில் இஸ்லாமி)

பெற்றோர் நல்லொழுக்கப் பண்புகளில் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து அவர்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாகத் திகழ்ந்து வரவேண்டும். ஏனெனில் பெற்றோரின் நடைமுறை, பிள்ளைகளின் இதயங்களில் விரைவாக இடம்பெற்று விடுகிறது.

பிள்ளைகளிடம் பொய் கூறுதல், அவர்களை ஏமாற்றுதல் போன்றவை கூடாது. அவை பாவமாக இருப்பது மட்டுமின்றி, பிள்ளைகளின் வழக்கத்தில் அவை பதிந்துவிடவும் வாய்ப்புள்ளவைகளாக உள்ளன. மேலும் பெற்றோர் தனிமையில் பேசும் விஷயங்களை பிள்ளைகள் முன்னிலையில் பேசலாகாது.

பெற்றோர் தாங்கள் ஈன்றெடுத்த குழந்தைச் செல்வங்கள் அனைவருக்குமிடையே சமத்துவத்தையும், நீதத்தையும் பேணி வரவேண்டும். அவர்களிடையே வேற்றுமை காட்டுவது கூடாது.

நபியவர்களின் சமுகத்தில் அமர்ந்திருந்த ஒருவர், அங்கு



அவரது மகன் (சிறுவன்) வந்தபொழுது, அவனுக்கு முத்தம் கொடுத்து தமது மடியில் உட்கார வைத்துக்கொண்டார். பின்னர் அவர் மகள் (சிறுமி) வரவே அவளை அருகில் உட்கார வைத்துக்கொண்டார். (முத்தம் கொடுக்கவோ, மடியில் உட்கார வைக்கவோ இல்லை) இதனைக் கவனித்த நபியவர்கள், "உம் இவ்விரு பிள்ளைகளுக்கு மத்தியில் நீர் சமத்துவம் செய்யக்கூடாதா? எனப் பகர்ந்தார்கள்.

(தர்பியத்துல் அவ்லாது)

நுஃமான் பின் பஷீர் எனும் நாயகத்தோழர் சிறுபிள்ளையாக இருந்தபொழுது அவர் தந்தை பஷீர் அவருக்கு சில அன்பளிப்புகள் வழங்கினார். அண்ணல் நபி (ஸல்) அவர்களை அணுகி இது குறித்து தெளிவு பெறாதவரை அவைகளை அவரின் சார்பாக ஏற்க முடியாது என அவர் தாயார் கூறிவிட்டார். உடனே அவர் தந்தை அவரை அண்ணலாரிடம் அழைத்துச் சென்று விபரத்தைக் கூறினார். அதற்கு அண்ணலார், இவரைத் தவிர உமக்கு வேறு பிள்ளைகள் உள்ளனரா? என வினவினார்கள். அவர் ஆம் எனக் கூறினார். இவருக்கு வழங்கியது போன்று அவர்களுக்கும் வழங்கினீரா? என வினவினார்கள். அதற்கவர் இல்லை எனக் கூறவே, அநியாயத்தின் மீது சான்றுரைப்பவராக என்னை ஆக்காதீர்கள் என்று கூறிவிட்டு, "அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு மத்தியில் நீதம் செய்யுங்கள்" என மேலும் கூறினார்கள்.

(இந்நிகழ்ச்சி புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.)

பிள்ளைகளுக்கு மத்தியில் பெற்றோர் பாரபட்சம் காட்டுவது, பிள்ளைகளது உள்ளத்தில் பெற்றோரின் மீதான அன்பையும் மரியாதையையும் குறைத்துவிடும். மேலும் பிள்ளைகளுக்கு மத்தியில் பிள்வையும் பொறாமையையும், விரோதத்தையும் ஏற்படுத்தும். அது அவர்களது சந்ததிகளில் கூட சிலவேளை நீடித்துவிடும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்கும், இம்மை மறுமையின் நற்பேறுகளுக்கும் வல்ல நாயனான அல்லாஹ் தஆலாவிடம் துஆ இறைஞ்சி வருதல் வேண்டும்.

தந்தையின் துஆ அங்கீகரிக்கப்பட்டதாகும் என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். **(திர்மிதி)**

பிள்ளைகளுக்கு தந்தை செய்யும் துஆ ஒப்புக்கொள்ளப் படும்பொழுது, தாயின் துஆ அதைவிட மேலாகவே ஒப்புக்கொள்ளப்படும். **(மிஷ்காத்)**

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அவ்வப்பொழுது நல்லுபதேசங்களை எடுத்துரைக்க வேண்டும். ஹஜ்ரத் லுக்மான் (அலை) தம் புதல்வருக்கு அழகியதோர் உபதேசம் செய்தார்கள். அதனை அல்லாஹ் தன் அருள்மறையில் ஸூரத்து லுக்மானில் விரிவாக எடுத்துரைக்கிறான். அதன் ஒரு பகுதி இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. அதனைப் போன்ற அறப்போதனைகளை அவர்களுக்கு அவ்வப் பொழுது எடுத்துணர்த்தி வருதல் நலம் பயக்கும். அது பெற்றோரின் கடமையும் பொறுப்பும் கூட.

ஹஜ்ரத் லுக்மான் (அலை) தம் புதல்வருக்கு கூறினார்கள்:

என்னருமை மகனே! தொழுகையை நீ நிலைநிறுத்தி வருவாயாக! நன்மையை ஏவுவாயாக! தீமையைத் தடுப்பாயாக! உம்மைத் தொட்டுவிட்டவை (சோதனைகள்) மீது பொறுமை செய்வாயாக! நிச்சயமாக இவை உறுதிமிகு விஷயங்களில் உள்ளவையாகும்.

உன் முகத்தை மக்களைவிட்டும் (பெருமையடிப்பதற்காக) திருப்பிக்கொள்ளாதே!

பூமியில் செருக்காக நடக்காதே! நிச்சயமாக அல்லாஹ், பெருமையடிப்பவராக, ஆணவத்துடன் நடந்துசெல்பவர் எவரையும் நேசிப்பதில்லை.



உன் நடையில் நடுநிலையைக் கடைப்பிடிப்பாயாக! உன் சப்தத்தைத் தாழ்த்திக் கொள்வாயாக! நிச்சயமாக சப்தங்களில் மிகக் கெட்ட சப்தம் கழுதையின் சப்தமாகும்.

**(அல்குர்ஆன், லுக்மான் 17,18,19)**

பிள்ளைகளின் சிறப்பையும், தயாளத்தன்மையுடன் அவர்களை அரவணைத்துச் செல்வதின் அவசியத்தையும், நபித்தோழர்களின் தோழர் அஹ்னப் அவர்களின் ஒரு சிறப்புரை நமக்கு எடுத்துரைக்கிறது. அதனை ஹஜ்ரத் முஆவியா (ரலி) அவர்களின் சமுகத்தில் அவர்கள் நினைவு கூர்ந்தார்கள். அப்பொழுது ஹஜ்ரத் முஆவியா (ரலி) தம் புதல்வரிடம் கோபித்திருந்தார்.

அஹ்னப் கூறினார்கள்: அமீருல் முஃமினீன் அவர்களே! நம் பிள்ளைகள் நமது இதயக்கனிகள்; நமது முதுகெலும்புகள். நாம் அவர்களுக்கு நிழல் தரும் வானம்; வளைந்து கொடுக்கும் விளைநிலம். அவர்களைக் கொண்டு ஒவ்வொரு மாபெரும் காரியங்கள் மீது நாம் ஆற்றல் பெறுகிறோம். ஆகவே நீர் அவர்களை கோபித்துக் கொண்டால், அவர்களை திருப்தி செய்வீராக! அவர்கள் கேட்டால் அவர்களுக்கு கொடுப்பீராக! (ஒருவேளை) அவர்கள் கேட்காவிடின் நீரே அவர்களுக்கு விரைந்தளிப்பீராக! அவர்களை கோபக்கண் கொண்டு நோக்காதீர். அவ்வாறு நீர் செய்தால் அவர்கள் உங்களது வாழ்வைச் சடைவடைவர். உங்களது மரணத்தை ஆவல் கொள்வர்.

இதன் பின் முஆவியா (ரலி) தமது புதல்வர் மீது திருப்தியடைந்து அவரைச் சேர்த்துக் கொண்டார்.

**(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

## கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்

ஒரு முஃமின் தம் இல்லற வாழ்விற்கு மனைவியைத் தேர்ந்தெடுக்குமுன், அவளது பல்வேறு சிறப்பியல்புகளைக் கவனித்தலும், அவள் இறையச்சமும், நல்லொழுக்கமும்,

மார்க்கப் பற்றும் நிரம்பியவளா என்பதை முக்கியமாக கவனித்து மண முடிப்பதே, அவரது வாழ்வின் வெற்றியின் அடிப்படையாகும். அவரது சிறந்த சந்ததிக்கு அடித் தளமாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு பெண் நான்கு காரியங்களுக்காக மணமுடிக்கப்படுகிறாள். அவளது பொருளிற்காக, அவளது வமிசத்திற்காக, அவளது அழகிற் காக, அவளது தீன்-மார்க்கத்திற்காக. தீன் உடைய பெண்ணைக்கொண்டு நீ வெற்றி பெறுவாயாக! (திர்மிதி)

நபியவர்கள் நவின்றதாக ஸஃதுபின் அபீவக்காஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: நல்லொழுக்கமுள்ள பெண், ஆதமின் மைந்தனின் சிதேவித்தனங்களில் நின்றுமுள்ளவளாவாள்.

(அஹ்காமுன்னிஸா)

நல்லொழுக்கம் நிரம்பிய பெண்ணை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றவர் வாழ்வின் விலைமதிப்பற்ற பாக்கியத்தையும் செல்வத்தையும் பெற்றவராகிறார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அப்துல் லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: உலகம் (சிறிது காலம்) இன்பம் பெறப்படும் பொருளாகும். அதில் நல்லொழுக்கமுள்ள மனைவியைவிடச் சிறந்த இன்பம் தரும் பொருள் வேறு கிடையாது.

(முஸ்லிம், அஹ்மது, நஸயி)

முஸ்லிம் பின் யஸார் (ரஹ்) என்ற பெரியார் கூறுகிறார்: நல்லொழுக்கம் நிரம்பிய மனைவி, நல்ல அண்டை வீட்டுக் காரர், விரிவான இல்லம் ஆகிய இம்மூன்று அருட் கொடைகளையும் ஒன்று சேரக் கொடுக்கப்பட்ட மனிதரையே, ஹிப்தத்-நானும் அவ்வாறு கொடுக்கப்படக் கூடாதா என்ற ஆகுமான பொறாமை கொள்கிறேன் எனக் குறிப்பிடுகிறார்.



அல்லாஹ் தஆலா தன் அருள்மறையில், "உங்கள் மனைவியிடம் நன்முறையில் சேர்ந்து வாழுங்கள்! எனக் கூறுகிறான். மற்றொரு வசனத்தில் "அப்பெண்கள் மீது தங்கள் கணவன்மார்களுக்கு செய்யவேண்டிய சில கடமை கள் இருப்பதுபோலவே, அப்பெண்களுக்கு அவர்களது கணவன்மார்களிடம் சில உரிமைகள் நன்மையைக் கொண்டு உள்ளன எனக் குறிப்பிடுகிறான். (2-228)

உங்கள் மனைவியருடன் நன்முறையில் நடந்து கொள்ளுங்கள் எனும் எமது உபதேசத்தை ஏற்றுக் கொள்வீராக! என பின்வரும் மணிமொழியில் மாநபி (ஸல்) கூறுகிறார்கள்.

பெண் (ஆதமின்) விலாவிலிருந்து படைக்கப்பட்டவள். அவ்விலாவில் மிகக் கோணலானது அதன் மேல் பகுதி யாகும். அதனை நீங்கள் சரி செய்தால் உடைந்துவிடும். அதனை அப்படியே விட்டுவிட்டால் வளைவாகவே இருந்துவிடும். ஆகவே அவர்களிடம் நன்முறையில் நடந்து கொள்ளுங்கள் எனும் எனது உபதேசத்தை ஏற்பீர்களாக!

(புகாரி, முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: உங்களில் சிறந்தவர், உங்கள் மனைவி யிடம் சிறந்தவர். நான் என் மனைவியிடம் சிறந்தவன். உங்கள் தோழர் (எவரும்) மரணித்துவிட்டால் அவரை (அல்லாஹ்வின் கிருபையின்பால்) விட்டுவிடுங்கள் (அவர் குறித்து தீயவை கூறவேண்டாம்). (திர்மிதி, தாரமி)

தமக்கு அல்லாஹ் அமானிதமாக வழங்கியுள்ள மனைவி யிடம் அன்பும் பாசமும் செலுத்தி அவளுக்குரிய உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை வழங்கி அவளது உணர்வு களை மதித்து, அவளது பணிகளில் துணைநின்று, அவளுடன் நன்முறையில் நடந்து அவளிடம் நல்லவராகத் திகழுபவர் உங்களில் சிறந்தவராகத் திகழுவார். அதன் மூலம் அவர் அல்லாஹு தஆலாவிடம் அதிகமதிகம் நன்மையைப்

பெறுவார் எனும் கருத்தை மேற்காணும் மாநபியவர்களின் மணிமொழி வழங்குகிறது.

நபியவர்கள் நவின்றதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: உங்களில் குணத்தால் மிக அழகான வரும், தம் மனைவியிடம் மிக மென்மையாக நடந்து கொள்பவரும் பரிபூரண முஃமின்களில் உள்ளவர்களாவர். (திர்மிதி)

ஒருமுறை ஹஜ் பயணத்தின்பொழுது அன்னை ஹப்ஸா நாயகி அவர்களின் ஒட்டகை நடக்க முடியாமல் உட்கார்ந்துவிட்டது அதனால் அவர்கள் மற்றவர்களை விட பிந்திவிட்டார்கள். அதனால் அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அதனைப் பார்த்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நின்று, தங்களது மேலாடையின் முந்தானியைக் கொண்டு தங்களது முபாரக்கான கரத்தால் அவர்களது கண்ணீரை துடைத்துவிட்டார்கள். (சிறிது நேரம்) நபியவர்கள் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் அழுது கொண்டேயிருந்தார்கள். (ஆதாபே ஜின்தகி)

இது கணவன் மனைவியிடம் பூண்டுள்ள அன்பு பாசத்தின் வெளிப்பாடாகவும், அவர் மீது காட்டும் பரிவும் இரக்கப்பண்புமாகும்.

நபியவர்கள் தபூக் அல்லது ஹுனைன் போருக்கு சென்று விட்டு திருமதீனா திரும்பியிருந்தார்கள். அன்னை ஆயிஷாவின் இல்லத்தில் சாமான்கள் வைக்கும் அலமாரியின் மீது ஒரு திரை இருந்தது. காற்றடிக்க அத்திரை விலகியது. அப்பொழுது அங்கிருந்த, அன்னை ஆயிஷாவின் விளையாட்டு பொம்மைகள் தெரிந்தன. ஆயிஷாவே! இவை என்ன? என நபியவர்கள் வினவினார்கள். இவை என் பிள்ளைகள் என்றார்கள். அப்பொம்மைகளிடையே துணியிலான இரு இறக்கைகள் உள்ள குதிரை ஒன்றிருந்தது. அதனைப் பார்த்த அண்ணலார் "மத்தியில் உள்ளது என்ன?"



என வினவினார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) "குதிரை' என்றார்கள். அதன்மீது இருப்பது என்ன என்றார்கள். அதற்கவர்கள் இரு இறக்கைகள் என்றார்கள். இரு இறக்கைகள் உள்ள குதிரையும் இருக்குமா என வினவினார்கள். அதற்கவர்கள் "நபி சுலைமான் (அலை) அவர்களின் குதிரைக்கு பல இறக்கைகள் இருந்தன என்பதை தாங்கள் கேள்விப்படவில்லையா என வினவினார்கள். உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் கடைவாய்ப் பற்கள் வெளிப்படுமளவு சிரித்தார்கள். (அபூதாவூது)

விளையாட்டு பொம்மை எனத் தெரிந்திருந்தும் தமது மனைவியிடம் சிறிது நேரம் அன்பொழுக பேசிக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக கேள்வி மேல் கேள்வி கேட்டு, அதற்கு அவர் அளித்த விவேகமான பதில்களைக் கேட்டு மகிழ்ந்தார்கள். கணவன் மனைவியுடன் அன்பாகப் பேசி, மகிழ்வதற்கு இது அழகிய முன்மாதிரியாகத் திகழ்கிறது.

கணவன் தன்னருமை மனைவியுடன் சிலவேளை விளையாடுவதும், தன் மனைவியிடம் காட்டும் அன்பின் வெளிப்பாடாக உள்ளது. பின்வரும் நிகழ்ச்சி அதனை எடுத்துரைக்கிறது.

ஒரு பிரயாணத்தில் நபியவர்களுடன் ஆயிஷா (ரலி) உடனிருந்தார்கள். ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்: நானும் நபியவர்களும் ஓட்டப்பந்தயம் ஓடினோம். நான் அவர்களை வென்றுவிட்டேன். நான் சதை வைத்தபின்பு, மீண்டும் ஒருமுறை அவர்களுடன் ஓட்டப்பந்தயம் ஓடினேன். அப்பொழுது அவர்கள் என்னை வென்றுவிட்டார்கள். இது அதற்குப் பகரம் என அப்பொழுது அவர்கள் கூறினார்கள். (அபூதாவூது)

கணவன் தமது மனைவியின் உணர்வுகளை மதித்து நடந்து கொள்வது அவர்களது இல்லற வாழ்வில் அன்பைப் பெருக்கச் செய்கிறது.

ஆயிஷா (ரலி) சிறுவயதில் தம் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அண்ணலார் வந்து விட்டால் தோழிகள் மறைந்து கொள்வார்கள். அண்ணலார் அவர்களை ஆயிஷாவிடம் அனுப்பி மீண்டும் விளையாடுமாறு கூறிவிடுவார்கள். அத்தோழிகள் ஆயிஷாவுடன் விளையாடிக் கொண்டிருப்பார்கள். **(புகாரி, முஸ்லிம்)**

கணவன் தன் மனைவியிடம் அன்பு, பாசம் காட்டி வருவதுடன் அவர்களது பணிகளில் தானும் பங்கெடுத்து அவளுக்கு உதவி வரவேண்டும்.

நபியவர்கள் தங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துவார்கள். அவர்களது சிரமங்களில் பங்கெடுத்துக் கொள்வார்கள். அவர்களது வேலைகளில் அவர்களுக்கு உதவியாக இருப்பார்கள்.

நபியவர்கள் வீட்டில் இருக்கும்பொழுது அவர்களது பணி என்ன? என அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் வினவப்பட்டது. அவர்கள் தொழுகைக்காக வீட்டிலிருந்து புறப்படும்வரை தம் மனைவிமார்களின் சிரமங்களில் (பணிகளில்) பங்கெடுத்துக் கொள்வார்கள் என அவர்கள் விடையளித்தார்கள். **(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

அண்ணலாரின் அருமை மகளார் பாத்திமாவின் கணவரான அலீ (ரலி) அவர்களும் தம் மனைவி பாத்திமாவின் வீட்டு வேலைகளில் உதவுபவராக இருந்துள்ளார்கள். பாத்திமா மாவைக் குழைத்து ரொட்டி சுடுகின்ற அதே வேளை, கணவர் அலீ (ரலி) அவர்கள் தண்ணீர் இறைத்துக் கொண்டு வருவார்கள். **(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)**

கணவன் வெளியே சென்றுவிட்டு தனது இல்லம் திரும்பும்பொழுது தன் மனைவிக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் ஸலாம் கூறி நுழைதல் வேண்டும். அது அக்குடும்பத்தில் பரகத் -அபிவிருத்தி அதிகரிக்கக் காரணமாக இருக்கும். அண்ணல் நபியவர்கள் கூறினார்கள்: நீர் உம் குடும்பத்



தாரிடம் வந்தால் அவர்களுக்கு ஸலாம் கூறுவீராக! உம் ஸலாம், உம்மீதும், உம் குடும்பத்தாரின் மீதும் பரகத்-அபிவிருத்தியாக உள்ளது. **(திர்மிதி)**

தம் மனைவி தமக்கு முன் சுத்தமாகவும், அழகாகவும், நறுமணமாகவும் இருக்க வேண்டுமென கணவர் விரும்புவது போல, அவரும் தம் வாழ்க்கைத் துணைவியான மனைவிக்கு மகிழ்ச்சியூட்டும் விதத்தில் சுத்தமாகவும், அழகாகவும், நறுமணமாகவும் இருப்பது பண்பாகும்.

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: என் மனைவி எனக்காக எவ்வாறு அலங்கரித்துக் கொள்கிறாளோ அவ்வாறு, நானும் அவளுக்காக என்னை அலங்கரித்துக் கொள்கிறேன்.

கணவன் தன் மனைவியிடம் காணும் சிற்சில குறைபாடுகளுக்காக அவளை வெறுக்கமாட்டார். அவளது சில பண்புகள் பிடிக்காவிட்டாலும் அவளிடமுள்ள வேறு சில சிறப்புகளையும் பண்புகளையும் எண்ணி திருப்தியடைவார்.

நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். முஃமினான கணவன் தன் முஃமினான மனைவியை வெறுக்கமாட்டார். அவளது சில பண்புகளை அவர் வெறுத்தாலும் அவளது வேறு பல (நல்ல) பண்புகளைக் கொண்டு திருப்தியடைவார். **(முஸ்லிம்)**

அல்லாஹ் தன் அருள்மறையில், 'ஸூரத்துன் நிஸா'வில் நீங்கள் அப்பெண்களை வெறுத்தால் (நீங்கள் பொறுமை செய்யுங்கள்) ஏதாவது ஒரு விஷயத்தை நீங்கள் வெறுத்திருக்கக்கூடும். (எனினும்) அவற்றில் அல்லாஹ் உங்களுக்கு அதிக நன்மைகளை ஆக்குவான். **(அல்குர்ஆன் 4-19)**

ஒருக்கால் அவள் அழகில் குறையுள்ளவளாக இருந்தாலும், அவளிடம் இறையச்சம், நல்வணக்கங்கள், நற்பண்புகள் இருக்கலாம். ஒருக்கால் அவற்றில் குறைபாடுகள் இருந்தால், அவளது வயிற்றில் சீதேவித்தனமிகு நல்ல பிள்ளைகள்

அல்லாஹ் அவருக்கு அருளலாம். அவர்களின் நன்மை மற்றும் - துஆவின் காரணமாக அவர் அல்லாஹ்விடம் நற்கூலி பெறுவார். அல்லது அவளின் காரணமாக அல்லாஹ் அவரது ரிஜ்கில் அபிவிருத்தியையும், வளமான நிலையையும் ஏற்படுத்தித் தரலாம். அல்லது அவளது பல்வேறு குறைபாடுகளைச் சகித்து அவளுடன் பொறுமையாக அவர் வாழ்க்கை நடத்தியதற்காக அவருக்கு மறுமையில் அதிக நற்கூலிகளை அல்லாஹ் வழங்கலாம். ஆகவே சிற்சில குறைகளை மட்டும் வைத்துக்கொண்டு, அல்லாஹ்வின் நுணுக்கமான அணுகுமுறைகளை புரிந்து கொள்ளாமல், அப்பெண்ணை வெறுப்பதும் அல்லது அவளை விவாகரத்துச் செய்துவிடுவதும் நன்றன்று. அதில் அவர்கள் பொறுமை செய்தால் அவர்களுக்கு பல நன்மைகளை ஆக்கித்தருவதாக மேற்காணும் வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

மேலும் கணவன் தன் மனைவியிடம் முடிந்தவரை மென்மையாகவும், இதமாகவும் நடந்து வரவேண்டும். சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து ஒற்றுமையாகவும் இணக்கத்தையும் கடைபிடித்து வாழுதல் வேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு பொழுதும் தங்கள் மனைவியரில் எவரையும் அடித்ததில்லை என ஸஹீஹான ஹதீஸில் வந்துள்ளது. (அஹ்காமுன்னிஸா)

கணவன், மனைவிக்கு உணவு, உடை, இருப்பிடம் வழங்குவது கடமையாகும். திருமணம் முடித்த நாள் முதல் அப்பொறுப்பு அவர் மீது வந்துவிடுகிறது. அவை விஷயத்தில் அவளுக்கு அவர் அநீதி இழைத்தல் கூடாது. தான் மட்டும் உண்டு உடுத்தி அவளை வேதனையில் விட்டு விடலாகாது. மனம் திறந்து அவளுக்கு நல்லபடி செலவழித்து வரவேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம், முஆவியா அல்குஷைரி (ரலி), இறைத்தூதரே! எங்களிலொருவர் மீது அவர் மனைவிக்குரிய உரிமை யாது? என



வினவினார். அதற்கு அண்ணலார், "நீ உண்ணும் பொழுது அவளுக்கும் உணவளிப்பதும், நீ உடுத்தும் பொழுது அவளையும் உடுத்தச் செய்வதுமாகும். அவளின் முகத்தில் அடிக்காதே! அவளை பழிக்காதே! (ஏதேனும் மாறு செய்தால்) வீட்டிலே (விரிப்பிலே) தவிர அவளை வெறுக்க வேண்டாம். (அஹ்மது, அபூதாவூது, இப்னுமாஜா)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் செலவு செய்யும் ஒரு பொற்காசு, அடிமையை உரிமை விடுவதில் செலவழிக்கும் ஒரு பொற்காசு, ஏழைக்கு தர்மமாக வழங்கும் ஒரு பொற்காசு, உங்கள் குடும்பத்தாருக்கு செலவழிக்கும் ஒரு பொற்காசு ஆகிய நான்கு பொற்காசுகளில் உங்கள் குடும்பத்தாருக்கு நீங்கள் செலவழிக்கும் பொற்காசுக்கே அதிக நற்கூலி கிடைக்கும். (முஸ்லிம்)

கணவன் தன் மனைவியின் நல்ல ஆலோசனைகளையும், வேண்டுகோளையும் ஏற்று அவளைக் கண்ணியப்படுத்தி வரவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் மூத்த புதல்வி ஜைனபுவை, தங்கள் மனைவி கதீஜாவின் வேண்டுகோளின் படி அவரது உறவினர் அபுல் ஆஸ் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். இதனை பிரபல வரலாற்றாசிரியர் இப்னு இஸ்ஹாக் (ரஹ்) அறிவிக்கிறார்கள்.

ஹுதைபிய்யா ஒப்பந்தத்தின் பொழுது, உம்ராவிற்கான இஹ்ராமை விட்டு நீங்குவதை துவக்குவது சம்பந்தமாக தங்கள் வாழ்க்கைத் துணைவியார் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் ஆலோசனையை ஏற்று, நபியவர்கள் அவ்விதமே செயல்பட்டார்கள். (தப்ஸீர் இப்னு கதீர்)

கணவன், தன் மனைவி தம்மை ஈன்றெடுத்த பெற்றோர் மற்றும் சகோதர, சகோதரிகள் போன்ற அவளது உறவினர்களுடன் உள்ள உறவையும் தொடர்பையும் துண்டிக்குமாறு

ஏவுவதோ, அவர்களுக்கு அவள் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதை தடுப்பதோ கூடாது. அது அப்பெண்மணிக்கும் அவர்களுக்குமிடையே அல்லாஹ் வழங்கியுள்ள இரத்த பந்த உறவுகளை துண்டிக்கச் செய்வதாகும். மேலும் மனைவியின் உறவினர்களும், திருமணத்திற்குப் பின்பு கணவனின் சம்பந்த வழி உறவினர்களாக ஆகிவிடுகின்றனர். இவ்வுறவை அல்லாஹ் தனது அருள்மறையில் 'ஸிஹ்ரு' திருமண சம்பந்த உறவு எனக் குறிப்பிடுகிறான். ஆகவே அவர்களை அவனும் கண்ணியப்படுத்தி வரவேண்டும்.

கணவன், தன் வாழ்க்கைத் துணைவியான மனைவிக்கு மார்க்கச் சட்டங்களையும், இஸ்லாமியப் பண்பாடுகளையும் எடுத்துக்கூறி வரவேண்டும். அவர்களை நரகைவிட்டுக் காப்பாற்றி சுவனம் சேர்ப்பது அவரின் பொறுப்பாக உள்ளது. மேலும் மனைவி மார்க்கச் சட்டங்களையும், இஸ்லாமியப் பண்பாடுகளையும் அறிந்து தேர்ந்தால், அதன் மூலம் அவரது பிள்ளைகளும் மார்க்க அறிவை பெறுவர். அக்குடும்பம் முழுவதிலும் இஸ்லாமிய நறுமணம் கமழும்.

அல்லாஹ், தன் அருள்மறையில் நன்னம்பிக்கையாளர்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பை விட்டுப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! எனக் கூறுகிறான். "உன் குடும்பத்தினரை தொழுகையைக் கொண்டு ஏவுங்கள்" என மற்றொரு வசனத்தில் குறிப்பிடுகிறான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: எம் மனிதர் தம் மனைவியை இரவில் எழுப்பி, பின்னர் இருவருமாக சேர்ந்து இரண்டு இரண்டு ரக்அத் (நபில்) தொழுவார்களானால் கணவனை திக்ரு செய்யும் ஆண்களின் அணியிலும், மனைவியை திக்ரு செய்யும் பெண்களின் அணியிலும் எழுதப்படும். **(அபூதாவூது)**



ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள், இரவில் எழுந்து தாங்கள் நபில் தொழுவதுடன், ஸஹ்ரின் நேரத்தில் தங்கள் மனைவியையும் தொழுவதற்காக எழுப்பிவிடுவார்கள்.

கணவன் மனைவியின் தவறுகளை அவ்வப்பொழுது மன்னித்து அவள் மீது பரிவும் இரக்கமும் காட்டி வருதல் வேண்டும். அப்பொழுது அவரது குற்றங்களை அல்லாஹ் மன்னித்து அவர்மீது இரக்கம் காட்டி வருவான்.

அல்லாஹ் தன் அருள்மறையில் "நீங்கள் மன்னித்தும் (அப்பிழைகளை) பொருட்படுத்தாமலும் விட்டு விடுவீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பாளனாகவும் மிகக் கிருபையுள்ளவனாகவும் உள்ளவன் எனக் குறிப்பிடுகிறான். **(அல்குர்ஆன் 64-14)**

கணவன் மனைவியுடன் வாழ்க்கையை இனி தொடர முடியாது! அதற்கான எல்லா வாயில்களும் மூடப்பட்டு விட்டன என்று உறுதியாக அறிந்தாலே தவிர அப்பெண்ணை தலாக்-மணவிலக்கு செய்ய முன்வரக்கூடாது. இயன்றவரை சமாதானமாகப் பேசி, இரு தரப்பிலும் விட்டுக்கொடுத்து, வாழ்க்கைப் பாதையில் தொடர்ந்து அவ்விருவரும் பயணம் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஆகுமான விஷயங்களில் அல்லாஹ்-தஆலாவிற்கு மிகக் கோபமானது தலாக்-மணவிலக்கு ஆகும். **(அபூதாவூது)**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக மஆது பின் ஜபல் (ரலி) அறிவிக்கிறார்கள்: மஆதே! அடிமைகளை உரிமைவிடுவதைவிட, தனக்கு பிரியமான ஒரு பொருளை பூமியின் மேல் பகுதியில் அல்லாஹ் படைக்கவில்லை. மேலும் தலாக்-மணவிலக்கைவிட தனக்கு மிகக் கோபமான ஒரு பொருளை அல்லாஹ் பூமியின் மேல் பகுதியில் படைக்கவில்லை. **(தாரகுத்னி)**

## மனைவி கணவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகள்

மனைவி தனது அழகிய தோழமையாலும் அழகிய நடைமுறையாலும் கணவனின் கண்குளிர்ச்சியாகத் திகழ்வாள். இதயத்தூய்மையோடு அவரை நேசித்து வருவாள். அவரிடம் புன்சிரித்து மென்மையாகவும் இதமாகவும் உரையாடுவாள். அவரது சொல்லை கண்ணியப்படுத்துவாள், நலவைப் பெறுவதிலும், தீமையை விட்டுவிடுவதிலும் அவருக்குத் துணை செய்வாள். தனது கற்பையும் கணவனின் பொருள்களையும் காத்து, கணவனுக்கு நம்பிக்கையாக நடந்து கொள்வாள்.

சிறந்த பெண்ணின் இலக்கணத்தை பின்வரும் நபிமொழி சுருக்கமாக எடுத்துரைக்கிறது.

பெண்களில் சிறந்தவர் யார்? என அண்ணலாரிடம் ஒரு முறை வினா விடுக்கப்பட்டது. அதற்கு அண்ணலார், கணவன் அவளைப்பார்த்தால் (தன் புன்னகை பூக்கும் முகத்தால், கனிமொழிகளால்) அவரை மகிழ்விப்பாள்; அவர் ஏவினால் அவள் வழிபடுவாள். தன் விஷயத்திலும் தனது (பொறுப்பிலுள்ள கணவனின்) பொருள்கள் விஷயத் திலும் அவள் வெறுப்பதைக் கொண்டு அவருக்கு மாறு செய்ய மாட்டாள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நஸயீ, பைஹகீ)

யஃலாபின் முனப்பஹ் (ரஹ்) அறிவிக்கிறார்கள்: நபியவர்களின் காலத்தில் ஒரு மனிதர் ஸாலிஹான மனைவி அமையப் பெற்றிருந்தார். அப்பெண்மணி தம் கணவர் இல்லத்தில் நுழைந்ததும் எம் தலைவரும் எம் குடும்பத்தின் தலைவருமான தங்களது வருகை நல்வரவாகுக! எனக் கூறி வரவேற்பார். பின்னர் தங்களது முயற்சி மறுமை சம்பந்தப் பட்டதாக இருக்குமானால் உங்கள் முயற்சியை அல்லாஹ் அதிகப்படுத்துவானாக! தங்கள் முயற்சி உலகம் சம்பந்தப் பட்டதாக இருக்குமானால் அல்லாஹ் தங்களுக்கு ரிஜ்கு வழங்கி உதவி செய்வானாக! எனக் கூறுவார். அதனை



அவர் அண்ணலாரிடம் வந்து கூறியபொழுது, 'முஜாஹித்' எனும் இறைவனின் பாதையில் உழைப்பவரின் பகுதி நற்கூலி அப்பெண்மணிக்கு உண்டு என்றும், அவள் அல்லாஹ்வின் பாதையில் செயல்படுபவள் என்றும் அண்ணலார் அப்பெண்மணியை புகழ்ந்துரைத்தார்கள்.

(அஹ்காமுன் நிஸா)

மனைவி தன் கணவருக்கு எந்த அளவு கண்ணியம் செய்தும், வழிப்பட்டும் வாழவேண்டும் என்பதை பின்வரும் மணிமொழியில் மாநபி (ஸல்) விளக்குகிறார்கள்:

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: முஹாஜிர் களும் (மக்காவைத் துறந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் வந்த தியாகத் தோழர்களும்) அன்ஸார்களும் (அவர்களுக்கு பேருதவி செய்த மதீனத்துத் தோழர்களும்) அமர்ந்திருந்த ஒரு கூட்டத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அமர்ந்தி ருந்தார்கள். அப்பொழுது ஓர் ஒட்டகை வந்து அவர்களுக்கு ஸஜ்தா-சாஷ்டாங்கம் செய்தது. அதனைப் பார்த்த தோழர்கள், அல்லாஹ்வின் திருத்தூதரே! தங்களுக்கு கால் நடைகளும், மரமும் ஸஜ்தா செய்கின்றன. ஆகவே தங்களுக்கு ஸஜ்தா செய்வதற்கு நாங்கள் மிகக் கடமைப் பட்டவர்களாக உள்ளோம் எனக் கூறினார்கள். அதற்கு அண்ணல் நபியவர்கள், உங்கள் ரப்பை-இரட்சகனை வணங்குங்கள்! (ஸஜ்தா, இபாதத் எனும் வணக்கமாகும்). அது அவனுக்கே சொந்தமானது) உங்கள் சகோதரனான என்னைக் கண்ணியப்படுத்துங்கள் (அதுவே போதுமானது) (மனிதர்களில்) ஒருவர் மற்றொருவருக்கு ஸஜ்தா செய்யு மாறு நான் ஏவுவதாக இருந்தால், மனைவி, தன் கணவனுக்கு ஸஜ்தா செய்யுமாறு ஏவி இருப்பேன். (அது கூடாததால் நான் அவ்வாறு ஏவவில்லை). (அஹ்மது)

கைஸ் பின் ஸஃது (ரலி) கூறுகிறார்கள்: ஹீரா நகரத் திற்கு (இராக் நாட்டின் ஒரு பழமையான நகரம்) நான் வந்தேன்: அங்கு மக்கள் தங்கள் படைத்தளபதிக்கு ஸஜ்தா

செய்வதைப் பார்த்தேன். அல்லாஹ்வின் திருத்தூதரல்லவோ ஸஜ்தா செய்யப்படுவதற்கு மிகத் தகுதி பெற்றவர்கள் என நான் (எனக்குள்) கூறிக்கொண்டேன். பின்னர் நான் திரும்பி வந்து நபியவர்களிடம் நான் ஹீரா சென்றிருந்தேன். அவர்கள் தங்கள் தளபதிக்கு ஸஜ்தா செய்வதைப் பார்த்தேன். (அப்பொழுது) தாங்கள் ஸஜ்தா செய்யப்படுவதற்கு மிகத் தகுதி பெற்றவர்களாக உள்ளீர்கள்" என நான் (எனக்குள்) கூறிக்கொண்டேன் என்பதை எடுத்துரைத்தேன். அதற்கு அண்ணலார், எமது மண்ணறைக்கருகில் நடந்தால் அதற்கு நீர் ஸஜ்தா செய்வீரா? எனக் கேட்டார்கள். அதற்கு நான் இல்லை எனக் கூறினேன். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு ஸஜ்தா செய்யாதீர்கள்! (அது அல்லாஹ்வுக்கே சொந்த மானது அவனைத் தவிர வேறு யாருக்கும் அதனைச் செய்யக்கூடாது) ஒருவர் மற்றவருக்கு ஸஜ்தா செய்யுமாறு நான் ஏவுவதாக இருந்தால், கணவர்களுக்காக பெண்கள் மீது அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள கடமைகளைக் கருதி, பெண்கள் தங்கள் கணவர்களுக்கு ஸஜ்தா செய்யுமாறு ஏவியிருப்பேன். (அபூதாவூது)

இறைக்கடமைகளை நிறைவேற்றி, தன் கணவனுக்கு வழிப்பட்டு வாழும், பெண், தான் விரும்பிய வாயில் வழியே சுவனத்தில் நுழைவாள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு பெண்மணி தமது ஐங்காலத் தொழுகையைத் தொழுதும், தமது (ரமலான்) மாதத்தில் நோன்பு நோற்றும், தமது கற்பைப் பாதுகாத்தும், தமது கணவனுக்கு வழிப்பட்டும் வாழ்வாளேயானால்,- தான் விரும்பிய வாயில் வழியே சுவனில் நுழைவாள்.

(அபூநுஅய்ம்)

கணவனின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் மனைவி முனைப்பு காட்டவேண்டுமென பின்வரும் நபிமொழிகள் தெரிவிக்கின்றன.



நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: கணவன் தன் மனைவியை தன் விரிப்பின்பால் அழைத்து (மார்க்கம் அனுமதித்துள்ள தங்கடங்கள் ஏதுமின்றி) அவள் மறுத்துவிடுவாளேயானால், (அதனால்) அவன் அவ்விரவை கோபமாகக் கழிப்பானேயானால், காலை வரை மலக்குகள் அவளை சபிக்கின்றனர்.

(புகாரி, முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக தலக் பின் அலி (ரலி) கூறுகிறார்கள்: கணவன் தன் தேவைக்காக (இல்லற உறவிற்காக) தன் மனைவியை அழைத்தால், (அதனை ஏற்று) அவனிடத்தில் அவள் வரட்டும். அவள் அடுப்பின் அருகில் (சமையல் பணிகளில்) இருந்தபோதிலும் சரியே. (திர்மிதி)

நபியவர்கள் நவின்றதாக உம்மு ஸலமா (ரலி) அறிவிக்கிறார்கள். எப்பெண்மணி, அவள் கணவன் அவள்மீது திருப்தியானவனாக இருக்கும் நிலையில் மரணமடைகிறாளோ, அப்பெண்மணி சுவனில் நுழைவாள். (திர்மிதி)

நபியவர்கள் நவின்றதாக மஆத் (ரலி) அறிவிக்கிறார்கள்: உலகில் எப்பெண் தன் கணவனை (தனது சொல்லால், செயலால்) நோவினை செய்கிறாளோ அப்பெண்ணுக்கு, சுவனத்திலுள்ள ஹூருல் ஈன்களில் நின்றுமுண்டான அவரது மனைவி கூறுவார்: அவரை நீ நோவினை செய்யாதே! அல்லாஹ் உம்மை நாசப்படுத்துவானாக! அவர் உம்மிடம் விருந்தாளியாக உள்ளார். விரைவில் அவர் உம்மை விட்டும் பிரிந்து எங்களிடம் வந்து விடக் கூடியவர்.

(திர்மிதி, இப்னுமாஜா)

கணவனிடம் தனக்கு ஏதேனும் கோபம் இருந்தால் அதனை நிதானம் இழக்காமல், (பொறுமை இழக்காமல்) சமிக்ஞையாக கணவனுக்கு உணர்த்தும் பெண், சிறந்த நடைமுறையை கடைபிடித்தவளாவாள்.

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் என்னிடம், ஆயிஷாவே! நீ என்மீது திருப்தியாக இருக்கும்

நேரத்தையும், கோபமாக இருக்கும் நேரத்தையும் நான் அறிவேன் எனக் கூறினார்கள். தாங்கள் அதனை எவ்விதம் அறிவீர்கள் என நான் கேட்டேன். அப்பொழுது சொன் னார்கள்: நீ என்மீது திருப்தியாக இருந்தால் (ஏதேனும் ஒரு விஷயத்தைக் கூறும்முன்) லா வரப்பி முஹம்மதின் - முஹம்மதின் இரட்சகன் மீது ஆணையாக" எனக் கூறுவாய்! நீ என் மீது கோபமாக இருந்தால் (ஏதேனும் ஒரு விஷ யத்தைக் கூறும் முன்) "லா வரப்பி இப்ராஹிம் - இப்ராஹி மின் இரட்சகன் மீது ஆணையாக" எனக் கூறுவாய். அதற்கு நான் சொன்னேன்: ஆம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இறைத்தூதரே! (அந்நேரத்தில்) தங்கள் பெயரைத் தவிர வேறெதனையும் நான் விட்டுவிடவில்லை. (தங்கள் மீதுள்ள அன்பையோ பாசத்தையோ அந்நேரத்திலும் நான் விட்டு விடவில்லை. தங்களது அன்பும் பாசமும் என்றும் எனது உள்ளத்தில் நிலைத்ததாகும்.) (புகாரி, முஸ்லிம்)

மனைவி தன் கணவனின் பொருள்களை நன்கு பாது காத்து அவரது இல்லத்தை சிறப்பாக நிர்வகித்து வர வேண் டும். அவரது பொருள்கள் எதையும் அவரது அனுமதியின்றி யாருக்கும் வழங்கலாகாது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: பெண் தன் கணவனின் இல்லத்தை நிர்வகிப்பவளாகும். அவள் எவ்வாறு அதனை நிர்வகித்தாள் என்பது பற்றி அவள் (அல்லாஹ்விடம்) விசாரிக்கப்படுபவளாகும்.

கணவனின் பொருள்களைப் பாதுகாத்து அழகிய முறை யில் நிர்வகித்து வரும் விஷயத்தில், குரைஷிப் பெண்களை அண்ணலார் புகழ்ந்துரைத்துள்ளார்கள். அவர்கள் கூறினார்கள்: குரைஷிப் பெண்கள் தங்கள் பிள்ளைகள் மீது அதிகப்பாசமுள்ளவர்கள். கணவனின் இல்லத்தை நன்றாகப் பாதுகாப்பவர்கள். (புகாரி)

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: நான்கு விஷயங்கள் கொடுக்கப்



பட்டவர், உலகம் மறுமையின் நன்மைகளைக் கொடுக்கப் பட்டவராவார். (1) அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திவரும் உள்ளம். (2) அல்லாஹ்வை திக்ரு செய்துவரும் நாவு. (3) சோதனைகள் மீதுபொறுமை செய்யும் உடல். (4) தன் கற்பிலும், தன் கணவனின் பொருளிலும் நம்பிக்கை மோசத்தை நாடாத மனைவி. (பைஹகீ)

எந்த ஒரு பெண்மணியும் தம் கணவனின் அனுமதியின்றி (அவரது பொருள்களிலிருந்து எதையும்) அன்பளிப்பு வழங்குதல் கூடாது என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

மனைவி வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டுச் செல்லும் பொழுது கணவனின் அனுமதி பெற்றுச் செல்லவேண்டும். மேலும் கணவன் வெறுப்பவரை அவரது இல்லத்தில் அனுமதித்தல் கூடாது.

எப்பெண் தம் கணவனின் அனுமதியின்றி அவரது இல்லத்தைவிட்டு வெளியேறிவிடுகிறாளோ, அப்பெண் மீண்டும் தம் கணவனின் இல்லம் திரும்பும்வரை, அல்லது அவள் கணவன் அவளை திருப்திபட்டுக்கொள்ளும் வரை அவள் அல்லாஹ்வின் கோபத்தில் இருப்பாள் என ஒரு மணிமொழியில் மாநபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

நபியவர்கள் நவின்றதாக மஆது பின் ஜபல் (ரலி) அறிவிக்கிறார்கள்: எவர் வருவதை தம் கணவன் வெறுக் கிறாரோ அவரை அவரது இல்லத்தில் அனுமதிப்பது, அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்ட பெண்மணிக்கு கூடாது. (அத்தர்ஹீபு வத்தர்ஹீபு)

மனைவி, கணவனின் அனுமதி பெற்று நபில் நோன்பு நோற்க வேண்டும்.

அபூஸயீத் (ரலி) கூறுகிறார்கள்: நாங்கள் நபியவர்களின் சமுகத்தில் அமர்ந்திருந்தபொழுது, அவர்களது சமுகத்தில்

ஒரு பெண்மணி வந்து கூறினார்: என் கணவர் ஸப்வான் பின் முஅத்தல், தொழுதால் என்னை அடிக்கிறார். நான் நோன்பு நோற்றால், அதனைவிட்டுவிடும்படி எனக்கு கட்டளையிடுகிறார். மேலும் சூரியன் உதிக்கும்வரை அவர் பஜ்ருத் தொழுகையைத் தொழுவதில்லை எனக் கூறினார் அப்பொழுது ஸப்வானும் அண்ணல் நபியவர்களிடம் அமர்ந்திருந்தார். அவர் மனைவி கூறியவை குறித்து ஸப்வானிடம் அண்ணலார் வினவினார்கள். அதற்கவர் "அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் தொழுதால் அவர் அடிக்கிறார் என்ற அவளது கூற்றை எடுத்துக்கொண்டால், அவள் தொழுகையில் (மிக நீளமான) இரண்டு ஸூராக் களை ஓதுகிறாள். அதனை நான் தடுத்திருந்தேன். அதற்கு அண்ணலார் ஒரு ஸூரா (அது சிறியதாயினும்) அதுவே மக்களுக்கு போதுமானதே எனப் பகர்ந்தார்கள். "நான் நோன்பு வைத்தால் அவர் விடும்படி ஏவுகிறார்" என்ற அவளது கூற்றை எடுத்துக்கொண்டால், அவள் தொடர்ந்து (நபிலான) நோன்புகளை வைத்துக் கொண்டே செல்கிறாள். நானோ வாலிபனாவேன் (இல்லற உறவுகளுக்கு அதனால் இடையூறு ஏற்படுகிறது) நான் பொறுமை செய்ய இயலாதவனாக உள்ளேன். அதற்கு அண்ணலார், எந்த ஒரு பெண்மணியும் தம் கணவனின் அனுமதியைக் கொண்டே தவிர, நபிலான நோன்பு நோற்கமாட்டாள் எனப் பகர்ந்தார் கள். நான் சூரியன் உதயமாகும்வரை பஜ்ருத் தொழுவ தில்லை என்ற அவளது கூற்றாகிறது, நாங்கள், எங்களது வழக்கம் அறியப்பட்ட குடும்பத்தினர்களாக உள்ளோம். (இரவு முழுவதும் தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி விட்டு இரவின் இறுதியில் உறங்கும் விவசாயத் தொழில் புரியும் குடும்பத்தினர் நாங்கள். அதனால் சில தினங்களில் தூக்கமிகைப்பால்) சூரியன் உதயமாகும்வரை நாங்கள் எழமுடியாமல் போய்விடுகிறது எனக் கூறினார். அதற்கு அண்ணலார், நீ விழித்தெழும்பொழுது தொழுவீராக.



(தூக்கம் உம்மையறியாமல் மிகைத்துவிட்டால் நீ எழும் நேரம் உமது தொழுகையின் நேரம்) எனப் பகர்ந்தார்கள்.

(அபூதாவூது, இப்னுமாஜா)

மனைவி கணவனின் இன்ப துன்பங்களில் பங்கேற்று வாழவேண்டும். குறிப்பாக கணவன் கஷ்டப்படும் நேரங் களில், அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும் நேரங்களில் நல்ல ஆறுதல் மொழிகளை கூறவேண்டும். அது அவர்களிடையே அன்பை பெருகச் செய்யும்.

அண்ணலாரின் மனைவி ஸபிய்யா (ரலி) அவர்களுக்கு, அண்ணலாரின் மீது மிகுந்த அன்பு இருந்தது. அண்ணலார் நோய்வாய்ப்பட்டுவிட்டால், கைசேதமே! அவர்களுக்கு பதிலாக நான் நோய்வாய்ப்பட்டிருக்கக்கூடாதா! எனக் கூறுவார்கள். (ஆதாபே ஜின்தகீ)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முதன் முதலாக ஹிராக் குகையில் வஹியைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பிய பொழுது, வஹியின் அழுத்தத்தின் காரணமாக குளிர் நடுங்கியவர்களாக, 'என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்! என்று கூறினார்கள் அப்பொழுது அவர்களது வாழ்க்கைத் துணைவியார் அன்னை கதீஜா (ரலி), அண்ணலாருக்கு ஆறுதலும், தைரியமும் அளித் தார்கள். "நிச்சயமாக ஒருபொழுதும் அல்லாஹ் உங்களை கேவலப்படுத்தமாட்டான் என உறுதிபடக்கூறினார்கள்.

கணவருக்கு மனைவி பணிவிடைகள் செய்து அவரது பேரன்பையும், அல்லாஹ்வின் நற்கூலியையும் பெற விழைதல் வேண்டும்.

அன்னை ஆயிஷா (ரலி), தங்கள் கணவரான அண்ணல் நபியவர்களுக்கு அவர்களது ஆடைகளை துவைத்துக் கொடுப்பார்கள். அவர்களது தலைக்கு எண்ணெய் தேய்த்து விடுவார்கள். அவர்களுக்கு தலைமுடி சீவி விடுவார்கள். நறுமணம் பூசி விடுவார்கள். (ஆதாபே ஜின்தகீ)

நாயகத் தோழியர்களான சஹாபிப் பெண்மணிகளும் தங்கள் கணவர்களுக்கு இவ்விதமே பணிவிடை செய்து வந்தார்கள்.

தன் கணவரிடம் நன்றியுணர்வு மிக்கவளாக மனைவி திகழ்ந்து வரவேண்டும். தன் வாழ்க்கை நெடுகிலும் அழகிய துணைவியாக, பாதுகாவலராக, பொறுப்பாளியாகத் திகழ்வதற்கு, அல்லாஹ் அவளுக்கு தேர்ந்தெடுத்து வழங்கிய அருட்கொடையாகும் அவர். அவர் மூலமாக அவளது தனிமையின் வெறுப்பான நிலையை அல்லாஹ் போக்கி விட்டான். அவளுக்கு பாதுகாப்பை வழங்குகிறான். அவர் மூலம் அவளது உணவு, உடை, இருப்பிடத் தேவைகளை அல்லாஹ் பூர்த்தி செய்கிறான். அவர் மூலம் அவளுக்கு அவள் கொஞ்சி மகிழ்ந்திடும் குழந்தைச் செல்வங்களை வழங்குகிறான். எல்லாவற்றுக்கும் மேலாக அவரோடு நன்முறை நடந்து அவரது திருப்தியைப் பெறுவதின் காரண மாக சுவனப்பூஞ்சோலை செல்ல அவள் தகுதிபெறுகிறாள். இத்தகு சிறப்புமிகு கணவனின் மாண்பையும், மதிப்பையும் இதயத்தில் பதித்து, என்றும் அவர்தம் நன்றி போற்றி வாழுதல் முஃமினான பெண்ணின் கடமையாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: தம் கணவனுக்கு நன்றி செலுத்தாத பெண்ணை மறுமை நாளில் அல்லாஹ் தனது (கிருபையுடைய பார்வையைக் கொண்டு) பார்க்கமாட்டான். (ஏனெனில்) கணவனைவிட்டு எந்த நிலையிலும் அவள் தேவையற்றவளாக இல்லை. (தனது அத்தியாவசியத் தேவைகள் மற்றும் பல்வேறு விஷயங்களில் அவர் பக்கம் அவள் தேவையானவளாகவே உள்ளாள்).

**(நஸயீ)**

தன்னிடம் குறை ஏதேனும் நிகழ்ந்துவிட்டால், அதற்குத் தன் கணவனிடம் வருத்தம் தெரிவித்து மீண்டும் அவரது பேரன்பைப் பெற விழையும் பெண் சுவனவாசியாவாள்.

கஃப்பின் அஜ்ஜு (ரலி) அறிவிக்கிறார்கள்: சுவனவாசி



சுளான ஆண்களை உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா என நபியவர்கள் எங்களிடம் கேட்டார்கள். நாங்கள், ஆம் இறைத்தூதரே! எனக் கூறினோம். அதற்கவர்கள், நபி சுவனத்தில் இருக்கிறார். அவரை உறுதியாக மெய்ப்பித்தோர் சுவனத்தில் உள்ளார்கள். வீரத்தியாகி சுவனத்தில் உள்ளார். அல்லாஹ்வின் விஷயத்தில் ஊரில் தம் சகோதரரை சந்திப்போர் சுவனத்தில் உள்ளார்கள்.

உங்கள் பெண்களில் சுவனவாசிகளைப் பற்றி உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா என நபியவர்கள் (மீண்டும்) வினவிய பொழுது நாங்கள், ஆம் இறைத்தூதரே! எனக் கூறினோம். அதற்கவர்கள் அதிகம் தனது கணவனை நேசிப்பவளான, அதிக குழந்தைச் செல்வங்களை ஈன்றெடுப்பவளான, தான் தவறேதேனும் செய்துவிட்டால், இதோ என் கரம் உங்கள் கரத்தில் - நீங்கள் பொருந்திக் கொள்ளும்வரை நான் சின்னஞ்சிறு உணவுப் பொருளைக் கூட சுவைக்க மாட்டேன் எனக் கூறி கணவனின்பால் அதிகம் மீள் பவளான பெண் (சுவனவாசியாவாள்) எனப் பகர்ந்தார்கள்.

**(தார்குத்னி பில் அப்ராது)**

தன்னருமைக் கணவனை மகிழ்விக்க மனைவி தன்னை பரிசுத்தப்படுத்தி, நறுமணம் பூசி, அலங்கரித்துக் கொள்வது சிறப்புமிகு பண்பாகும்.

ஒருமுறை முஹாஜிர் தோழர்களில் ஒருவரான உத்மான் பின் மள்வூன் (ரலி) அவர்களின் மனைவியை அன்னை ஆயிஷா (ரலி) சந்தித்தார்கள். அப்பொழுது உத்மான் பின் மள்வூனின் மனைவி சாதாரண ஆடையில் இருந்தார்கள். அப்படியொரு அலங்காரம் அவர்களிடம் இல்லை. அதனைப் பார்த்த அன்னை ஆயிஷா (ரலி) அப்பெண் மணியைப் பார்த்து என்ன உமது கணவர் வெளியூர் பிரயாணம் சென்றுள்ளாரா? என வினவினார்கள்.

**(ஆதாபே ஜின்தகீ)**

மேலும் தமது இல்லத்தையும், குழந்தைகளையும் பரிசுத்த

மாக வைத்துக்கொள்வது சிறப்பாகும். பரிசுத்தம் ஈமானில் பகுதியாக விளங்குகிறது. பல்வேறு நற்பேறுகளுக்கு அது காரணமாக உள்ளது.

அல்லாஹ்வின் வரம்புகளைப் பேணி தனது கணவனுடன் தொடர்ந்து தான் வாழ்க்கை நடத்த முடியாது என்ற நிலை உறுதியானாலே தவிர, ஒரு பெண் தன் கணவனிடம் தலாக்-மணவிலக்கு கேட்பது முறையன்று.

நபியவர்கள் நவின்றதாக தவ்பான் (ரலி) அறிவிக்கிறார்கள்: எப்பெண் (ஷரீஅத் ரீதியிலான) அவசியக் காரணமின்றி தன் கணவனிடம் தலாக்-மணவிலக்கு கேட்கிறாளோ அவளுக்கு சுவனத்தின் வாசல் விலக்கப்பட்டதாகும்.

(அஹ்மது, திர்மிதி, அபூதாவூது, இப்னுமாஜா, தாரமி)

ஒரு சிறந்த இல்லத்தரசியாகத் திகழப்போகும் மணாளிக்கு, அவளை ஈன்றெடுத்து அமுதூட்டி, சீராட்டிப் பாராட்டி, வளர்த்து வாலிபமாக்கி, ஒரு நல்ல மணாளருடன் மணமுடித்துக் கொடுத்துவிட்டு ஓர் அன்புத்தாய், அவளை கணவனின் இல்லத்திற்கு அனுப்பும்பொழுது செய்த சீர்மிகு உபதேசம் (ஒரு நிகழ்ச்சி) இங்கு எடுத்துக் கூறப்படுகிறது.

உஸாமா பின்த் ஹாரிஸ் என்னும் பெண்மணி தம் அருமை புதல்விக்கு இவ்வாறு உபதேசம் செய்கிறார்.

அருமை மகளே! இப்பொழுது நீ, பிறந்து வளர்ந்த இல்லத்தைவிட்டுப் பிரிந்து இதுவரை நீ அறிந்திராத புதியதோர் இல்லத்திற்கு செல்கிறாய்! நீ இதுவரை பழகாத தொரு மனிதரிடம் செல்கிறாய்! அங்கு அவருக்கு நீ அடிமைப்பெண்ணாக ஆகிவிடு. அவர் உனக்கு அடிமையாக ஆகிவிடுவார். (அவருக்கு நீ பணிந்து நன்முறையில் நடந்தால், அவர் உன் பேச்சைக் கேட்டு நடப்பார்). நீ அவரிடம் பத்து வித நற்குணங்களை பேணிக்கொள்:



1. கனாஅத்-போதுமென்ற மனப்பான்மையுடன் அவரிடம் நடந்துகொள். (போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்பது ஆன்றோர் வாக்கு.)
2. அவரிடம் அழகிய செவியேற்பைக் கொண்டும், வழிப்படுதலைக் கொண்டும் பழகி வருவாயாக!
3. அவரது கண் கவருபவை எவை என்பதை நீ அறிந்து வைத்துக்கொள்! அவருக்கு அருவெறுப்பான ஒன்றின் மீது அவரது பார்வைபட்டு விடாமல் பார்த்துக் கொள்.
4. உனது நறுமணத்தை அவர் நுகரவேண்டும். உன்மீது துர்வாடை வீசக்கூடாது.
5. அவரது உணவின் நேரத்தை அறிந்து அவருக்கு நீ உணவை அளிப்பாயாக! ஏனெனில் பசி, கொதிப்பை உண்டாக்கக் கூடியதாகும்.
6. அவரது உறக்கத்தின் நேரத்தை நீ அறிந்து வைத்துக் கொள். ஏனெனில் தூக்கத்தைத் தடுப்பது, கோபத்தை வரவழைப்பதாகும்.
7. அவரது பொருள்களை நீ கவனமுடன் பாதுகாத்து வருவாயாக! பொருளை பாதுகாப்பதில் முக்கிய விஷயம், அதன் மதிப்பை அறிந்து நடந்து கொள்வதாகும்.
8. அவரது குடும்பத்தினருடன் நன்முறையில் நடந்து கொள்வாயாக!
9. அவருக்கு நீ மாறு செய்யாதே! அவருக்கு நீ மாறு செய்தால் நீ அவரது கோபத்தை கிளப்பி விட்டவளாக ஆகிவிடுவாய்.
10. அவரது இரகசியத்தை யாரிடமும் கூறாதே! நீ அவ்வாறு கூறினால், அவர் உனக்கு மோசம் செய்வதை நீ அச்சம் தீரமாட்டாய்.

பின்னர் அவர் கவலையாக இருக்கும்பொழுது நீ மகிழ்ச்சியாக இருப்பதையும், அவர் மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது நீ கவலையாக இருப்பதையும் உனக்கு நான் எச்சரிக்கிறேன். முதல் குணம் குறைபாட்டை உண்டாக்கும். இரண்டாவது குணம் அவரைக் கவலையில் ஆழ்த்தும். மக்களில் அவரை மிகக் கண்ணியப்படுத்துபவளாக ஆகிவிடு. அவர் உன்னை கண்ணியப்படுத்துபவராக ஆகி விடுவார். நீ விரும்பும் அல்லது வெறுக்கும் விஷயத்தில் உனது திருப்தியைவிட, அவரது திருப்தியை நீ முற்படுத்தி வைத்தாலே தவிர, நீ விரும்பும் மனமகிழ் இல்லற வாழ்வை நீ அடையமுடியாது. (அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

அஸ்மா பின்த் யஜீதில் அன்ஸாரியா (ரலி) என்ற பெண் மணி நபியவர்களின் சமுகம் பெண்களின் பிரதிநிதியாக வந்து கூறினார்கள்: அல்லாஹ்வின் திருத்தூதரே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நான் பெண்களின் பிரதிநிதியாக தங்கள் சமுகம் வந்துள்ளேன். மேற்கிலும், கிழக்கிலும் உள்ள பெண்கள் எனது இவ் வருகையைப் பற்றி கேள்விப்பட்டுள்ளார்கள். அல்லது ஒரு வேளை அவர்களில் (சிலர்) கேள்விப்பட்டிருக்காவிட்டா லும், அவர்களும் எனது இவ்வபிப்ராயத்தின் மீதே இருப் பார்கள்.

நிச்சயமாக அல்லாஹ், தங்களை ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் நபியாக அனுப்பியுள்ளான். நாங்கள் பெண்கள், உங்கள் வீடுகளில் தங்கியுள்ளோம். உங்கள் குழந்தைகளைச் சுமந்தவர்களாக உள்ளோம். ஆண்களாகிய நீங்கள் (அவ்வப்பொழுது) கூட்டம் கூடுவது கொண்டும், ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்வது கொண்டும், நோயாளிகளை உடல் நலம் விசாரிப்பது கொண்டும், மரணித்தோரின் நல்லடக்கத்தில் கலந்து கொள்வது கொண்டும். ஹஜ்ஜிற்கு மேல் ஹஜ் செய்வது கொண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக ஜிஹாதில் (நேரடியாக



பங்கேற்பது கொண்டும் எங்களைவிட மேன்மை யாக்கப்பட்டுவிட்டீர்கள் - சிறப்பாக்கப்பட்டுவிட்டீர்கள்.

உங்களில் ஒருவர் ஹாஜியாக, உம்ரா செய்பவராக, ஜிஹாதில் செல்பவராக புறப்பட்டுவிட்டால், உங்களது செல்வங்களை நாங்கள் பாதுகாக்கிறோம். உங்களது ஆடைகளை நாங்கள் நெசவு செய்கிறோம். உங்கள் குழந்தை களை நாங்கள் வளர்க்கிறோம். ஆகவே இந்நலவான காரியங்களில் நாங்களும் உங்களுடன் பங்கு பெற்றவர் களாக ஆகுவோமாக! அல்லாஹ்வின் திருத்தூதரே! எனக் கேட்டார்.

உடனே தோழர்களின் பக்கம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திரும்பி, இப்பெண்மணியைவிட, தமது மார்க்கத் தைப் பற்றி மிக அழகாக வினவும் வேறு பெண்மணியை கேள்விப்பட்டீர்களா? எனக் கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், 'இல்லை, அல்லாஹ்வின் திருத்தூதரே!' எனக் கூறினார்கள்.

(அதன்பின்) அஸ்மாவே! நீர் திரும்பிச் சென்று உமக்குப் பின்னால் உள்ள பெண்மணிகளுக்கு அறிவிப்பாயாக! உங்களில் ஒரு பெண்மணி, தம் கணவனை நன்றாகக் கவனித்துப் பேணிவருவதும், அவரது பொருத்தத்தைத் தேடுவதும், அவருக்கு உகந்தவைகளைத் துயருவதும், நீர் கூறிய அனைத்திற்கும் (ஆண்கள் மட்டுமே செய்கிற அனைத்து நற்காரியங்களுக்கும்) ஈடாகும் என நபியவர்கள் கூறினார்கள்.

இதனைக் கேட்டு அஸ்மா (ரலி) மிகக் குதூகலமும், மகிழ்ச்சியும் பொங்கியவர்களாக, தக்பீரும் (அல்லாஹு அக்பர் என்றும்) தஹ்லீலும் (லா இலாஹ இல்லல்லாஹ் என்றும்) கூறியவர்களாக திரும்பிச் சென்றார்கள்.

(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

## உற்றார் உறவினரை ஆதரித்து வாழ்தல்

உற்றார் உறவினரை ஆதரித்து வாழ்வது சுவனில் சேர்ப்பித்து, நரகைவிட்டு தூரமாக்கும் செயல்களில் ஒன்றாகும்.

அபூ அய்யூப் ஹாபித் பின் ஜைதில் அன்ஸாரி (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் அண்ணல் நபியவர்களிடம், "இறைத்தூதரே! என்னை சுவனில் நுழைவித்து, நரகை விட்டுத் தூரமாக்கும் செயலை அறிவித்துத் தருவீர்களாக! என வினவினார். அதற்கு அண்ணலார், அல்லாஹ்வை நீர் வணங்குவீராக; அவனுக்கு எப்பொருளையும் இணை வைக்காதீர்! தொழுகையை நிலைநாட்டி வருவீராக! உற்றாரை ஆதரித்து வருவீராக! எனப் பகர்ந்தார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

உற்றாரைச் சேர்த்து வாழ்பவர்களுக்கு மறுமையின் நற்கூலிகள் மட்டுமின்றி இம்மையின் நற்பேறுகளும் கிடைக்கின்றன.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: யார் தமது இரணத்திலும், ஆயுளிலும் விஸ்தரிக்கப்பட விரும்புகிறாரோ அவர், தம் உறவினரைச் சேர்த்துக்கொள்ளட்டும்.

(புகாரி, முஸ்லிம்)

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் வருமுன், இளமையிலேயே உற்றாரை ஆதரித்தல் உட்பட பல்வேறு இரக்கப் பண்புகள் அவர்களிடம் மிளிர்ந்தன.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக ஹிராக் குகையில் வஹி இறங்கியதைத் தொடர்ந்து தமது இல்லத்திற்கு திரும்பி தமது மனைவி கதீஜா (ரலி) அவர்களிடம் விரபங்களை எடுத்துரைத்தார்கள். ஜிப்ரயீலின் அழுத்தத்தின் காரணமாக தனது உயிரின் மீதே தான் பயப்பட்டுவிட்டதாகக் கூறினார்கள். அப்பொழுது அன்னை கதீஜா (ரலி) அண்ணலாரிடம் கூறினார்கள்: அல்லாஹ்வின்



மீது ஆணையாக! அல்லாஹ் ஒருபொழுதும் தங்களைக் கேவலமாக்க மாட்டான். ஏனெனில் தாங்கள் உற்றார் உறவினரைச் சேர்த்துக் கொள்கிறீர்கள்! பிறரது கஷ்டங்களை தாங்கள் சுமந்துகொள்கிறீர்கள்! ஏழை எளியோர்க்கு சம்பாதித்துக் கொடுக்கிறீர்கள்! விருந்தாளிகளுக்கு விருந்தளிக்கிறீர்கள். ஆபத்துகளில் (மக்களுக்கு) உதவி செய்கிறீர்கள் எனக் கூறினார்கள். (புகாரி)

ஒரு குடும்பத்தில் பெற்றோர், மனைவி மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளுக்குப் பின் ஒரு மனிதன், பேணிப் பாதுகாத்து வரவேண்டிய உறவு, இரத்த பந்தத்திலான உறவாகும்.

தம் பெற்றோரின் பெற்றோர்கள், தம் சகோதர சகோதரிகள், பெற்றோரின் சகோதர சகோதரிகள், தம் சகோதர சகோதரரிகளின் பிள்ளைகள் போன்றவர்கள் இரத்த பந்தத்தையுடைய உறவினர்களாவர். இவர்களது உறவு மிக உறுதியானதும் மிக நெருக்கமானதும் ஆகும். இவர்களே உறவினரில் முதல் அந்தஸ்தை வகிக்கின்றனர்.

இவர்கள் தவிர தூரத்து உறவினர்கள், ஸிஹ்ரு எனும் திருமண சம்பந்த வழி உறவினர்கள், "கராபத்" என்னும் பொதுவான உறவினரில் அடங்குவர்.

உறவினர்களுடன் நல்லுறவு பூண்டு அவர்களை அன்போடு அரவணைத்து வாழுவது மூலம் குடும்பத்தில் அன்பும், மகிழ்வும் சாந்தியும் உருவாகும். குடும்பங்களில் இந்நிலை ஏற்படும்பொழுது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழும் நாட்டிலும் அமைதியும் அன்பும் மகிழ்வும் நிலவும். குடும்பங்களின் உறவுகள் பாதிக்கப்பட்டு சச்சரவுகள், பிணக்குகள் தோன்றும்பொழுது நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

தனி மனிதன் மற்றும் தேசிய நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு இஸ்லாம் இரத்தபந்த உறவுகளைப் பேணி

வருவதின் அவசியத்தை மிக முக்கியமாக வலியுறுத்தியுள்ளது.

உறவினருக்கு உதவி வாழும் பண்பை அல்லாஹ் தன் அருள்மறையில் பல்வேறு இடங்களில் எடுத்துரைக்கிறான்.

திருக்குர்ஆனின் "ஸூரத்துல் நஹ்லு"வில் அல்லாஹ் கூறுகிறான்:

நிச்சயமாக நீதம் செலுத்துவது கொண்டும், நன்மை செய்வது கொண்டும், உறவினர்களுக்கு வழங்குவது கொண்டும் அல்லாஹ் ஏவுகிறான். மானக்கேடான செயல்கள், தீமைகள், அக்கிரமம் செய்தல் ஆகியவைகளை விட்டு விலக்குகிறான். நீங்கள் நல்லுபதேசம் பெறுவதற்காக (இவைகளை) அல்லாஹ் உங்களுக்கு உபதேசம் செய்கிறான். (அல்குர்ஆன் 16-90)

திருக்குர்ஆனின் "ஸூரத்து பனீ இஸ்ராயீலில்" அல்லாஹ் கூறுகிறான்:

உறவினர்களுக்கு அவர்களது உரிமையை கொடுப்பீராக! மேலும் ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் (அவர்களது உரிமையைக்) கொடுப்பீராக! வீண்விரயம் செய்யாதீர். நிச்சயமாக வீண் விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாவார்கள். (அல்குர்ஆன் 17-26)

திருக்குர்ஆனின் "ஸூரத்துந் நிஸா"வில் அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எப்பொருளையும் இணை வைக்காதீர்கள். பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும் உபகாரம் செய்யுங்கள். (அல்குர்ஆன் 4-36)

உறவினர்களை இணைத்து வாழ்வது முஃமின்களின் பண்பாகவும், சின்னமாகவும் திகழ்கிறது.

நபியவர்கள் நவின்றுள்ளார்கள்: அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கைக்கொண்டவர் தம் உறவினரை சேர்த்துக் கொள்ளட்டும், (புகாரி, முஸ்லிம்)



உறவினர்கள் தமது உறவை தாமாக துண்டித்துச் சென்றுவிடினும் நாம் அவர்களை இயன்றளவு சமாதானப் படுத்தி, மீண்டும் அவர்களைச் சேர்த்துக்கொள்ள முயல வேண்டும். அவ்வாறு செய்பவரே உறவைச் சேர்க்கும் பண்பாளராவார்.

நபியவர்கள் நவின்றதாக இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: பகரத்திற்கு பகரம் செய்பவர் உறவை சேர்த்துக் கொள்பவரல்ல; (மாறாக) அவரது உறவு துண்டிக்கப் பட்டிருந்தால் அதைச் சேர்த்துக் கொள்பவரே உறவைச் சேர்ப்பவராவார். (புகாரி)

தமது உறவைத் துண்டித்துக்கொண்டவரின் உறவை மீண்டும் சேர்த்துக் கொள்பவரின் கேள்வி கணக்குகளை மறுமையில் அல்லாஹ் இலகுவாக்கி வைப்பான்.

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: மூன்று விஷயங்கள் உங்களில் எவரிடம் இருக்கிறதோ அவரை அல்லாஹ் எளிதாக கேள்வி கணக்கு கேட்பான். தனது அருட்கொடையால் அவரை சுவனபதியில் நுழையச் செய்வான் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்குத் தோழர்கள், "இறைத்தூதரே, எங்களின் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும், அவை யாவை? என வினவினார்கள். அதற்கு நபியவர்கள், உமக்கு இல்லை என்று மறுத்தவருக்கு நீர் கொடுப்பதும், உம்மை துண்டித்துக் கொண்டவரை நீர் சேர்த்துக் கொள்வதும், உமக்கு அநீதி இழைத்தவரை நீர் மன்னித்துவிடுவதுமாகும் எனப் பகர்ந்தார்கள். (திப்ரானி, ஹாகிம்)

வசதி படைத்த செல்வந்தர்கள், தங்கள் ஏழை உறவினர்களை ஆதரித்து வந்தால், சமுதாயத்தில் ஏழ்மையும் வறுமையும் தணியும். அவர்களது வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு உருவாகும். குடும்பத்தின் கண்ணியமும், சிறப்பும் மேலோங்கும். பிறரிடம் சென்று அவர்கள் உதவி கேட்கும் நிலை ஏற்படாது.

உறவினருக்கு தர்மம் செய்வது, இரு மடங்கு நன்மைகளை பெற்றுத் தருகிறது. மேலும் அது தர்மங்களில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகிறது.

நபியவர்கள் நவின்றதாக ஸல்மான் பின் ஆமீர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஏழைக்கு தர்மம் செய்வது ஒரு தர்மமாகும். இரத்த பந்த உறவினர்களுக்கு தர்மம் செய்வது இரண்டு தர்மங்களாகும். ஒன்று சதகா (தர்மம்) மற்றொன்று உறவை இணைத்துக் கொள்ளுதல். (திர்மிதி)

மதீனாவில் அபூதல்ஹா அன்சாரி (ரலி) மதீனாவாசிகளில் அதிக பேரீத்தம் பழத்தோட்டங்கள் வைத்திருப்பவராக இருந்தார். அவைகளில் அவருக்கு மிகப் பிரியமானதாக "பீர்ஹாவு" எனும் தோட்டம் இருந்தது. அது நபியவர்களின் மஸ்ஜிதுன் நபவி பள்ளியை முன்னோக்கி இருந்தது. சில நேரங்களில், நபி (ஸல்) அவர்கள் அத்தோப்பில் நுழைந்து அதன் கிணற்றிலிருந்து சுவையான நீரைப் பருகுவார்கள்.

"உங்களுக்குப் பிரியமான பொருட்களிலிருந்து நீங்கள் (அல்லாஹ்வின் பாதையில்) செலவழிக்காதவரை, நிச்சயமாக நீங்கள் (பரிபூரண) நன்மையை அடையமாட்டீர்கள்" எனும் திருக்குர்ஆனின் "ஸூரத்து ஆல இம்ரானின்" வசனம் இறங்கியதும், தமக்கு மிகப்பிரியமான 'பீர்ஹா' தோப்பை "இது அல்லாஹ்வுக்காக சதகாவாகும்! இதன் நற்கூலியை அல்லாஹ்விடம் நான் ஆதரவு வைக்கிறேன். இதனை தங்களுக்கு அல்லாஹ் காட்டிய வழியில் செலவழித்து விடுங்கள்" எனக்கூறி நபியவர்களிடம் ஒப்படைத்தார்கள். அதற்கு நபியவர்கள், "நல்லது அதுவே இலாபம் தரும் செல்வம் எனக் கூறி, அதனை உம் நெருங்கிய (ஏழை) உறவினர்களுக்கு நீர் வழங்கிவிடலாம் எனக் கருதுகிறேன் என்றார்கள். அவ்வாறே செய்யுங்கள் இறைத்தூதரே! என அவர் கூறவே, அதனை அவரது நெருங்கிய உறவினர்களுக்கும், அவரது தந்தையின் சகோதரரின் பிள்ளைகளுக்கும் நபியவர்கள் பங்கு வைத்துக் கொடுத்தார்கள்.



(புகாரி, முஸ்லிம்)

வசதியுள்ளவர்கள், தம் சகோதரர், சகோதரி போன்ற மஹ்ரமான உறவினர்களுக்கு உதவி செய்வது வாஜிபாகும் என இமாம் அபூஹனீபா (ரஹ்) கூறுகிறார்கள்.

(ஹாஷியத்து ஜலாலைன்)

ஒரு பெண்மணி, தமது தர்மத்தை தம் ஏழையான கணவருக்கும், தம்மிடம் வளரும் அனாதைக் குழந்தைகளுக்கும் கொடுப்பதின் மூலம் இரட்டிப்பு நன்மை அடைகிறார் என பின்வரும் ஹதீஸ் தெரிவிக்கிறது.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களின் மனைவி ஜைனபுத் தஹபிய்யாவும், மற்றொரு அன்ஸாரிப் பெண்மணியும், நபியவர்கள் சதகாவின் மாண்பையும் அவசியத்தையும் பற்றிக் கூறியதைச் செவியுற்று நபியவர்களின் இல்லம் வந்து அங்கிருந்த பிலால் (ரலி) அவர்களிடம், "இரு பெண்கள் தங்களது இல்லத்தின் தலைவாயிலில் நிற்கிறார்கள். தங்களது சதகாவை, தங்கள் கணவர்களுக்கும், தங்களிடம் வளரும் அனாதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாமா? எனக் கேட்கிறார்கள் என்பதாக நபியவர்களிடம் கூறுங்கள் என்றார்கள்.

பிலால் (ரலி) வீட்டினுள் சென்று நபியவர்களிடம் இதனைக் கூறவே, "அவ்விரு பெண்மணிகளுக்கு, இரு மடங்கு நற்கூலி உண்டு-ஒன்று உறவைப் பேணிய நற்கூலி, மற்றொன்று சதகாவின் நற்கூலி எனப் பகர்ந்தார்கள்.

இது, ஜைனபுத் தஹபிய்யா (ரலி) அவர்கள் அறிவித்து, புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸின் சுருக்கமாகும்.

தர்மங்களில் மேலான தர்மத்தை உமக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? என ஒரு முறை நபியவர்கள், ஸுராக்கா பின் ஜுஃஷும் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள்.

அதற்கவர்கள், "ஆம் அறிவித்துத் தாருங்கள் அல்லாஹ்வின் தூதரே எனக் கூற, சம்பாதித்துத் தர உன்னைத் தவிர வேறு யாரும் இல்லாத நிலையில் (தலாக்-மணவிலக்கின் மூலம்) உம்மிடம் திருப்பி அனுப்பப்பட்ட உம் புதல்விக்கு நீர் செய்யும் தர்மமாகும் எனக் கூறினார்கள். (அதபுல் முப்ரது)

உறவினரை இணைத்து வாழ முற்படும்பொழுது, சில சமயம் சில உறவினர்களால் ஏற்படும் சிரமங்களைச் சகித்துக் கொள்பவருக்கு அல்லாஹுதஆலாவிடம் நற்கூலி உண்டு. அதே சமயம் மறுமுனையில் அவரிடம் உறவைப் பேண மறுப்பவரின் மீது அல்லாஹ்வின் வேதனை ஏற்படுகிறது.

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர், "இறைத்தூதரே! எனக்கு சில உறவினர்கள் உள்ளனர். அவர்கள் எத்தகைய வர்களெனில், நான் அவர்களைச் சேர்க்கிறேன். அவர்கள் என்னைத் துண்டித்துச் செல்கிறார்கள்! நான் அவர்களுக்கு நன்மை செய்கிறேன். அவர்கள் எனக்கு கெடுதல் செய் கிறார்கள். நான் அவர்களை புரிந்து கொள்கிறேன். அவர்கள் என்னைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள் எனக் கூறினார். அதற்கவர்கள், நீர் கூறுவது போன்று நீர் இருந்தால் நீர் அவர்களை சூடான சாம்பலை உண்ணச் செய்தவர் போன்றாவீர். (சூடான சாம்பல் உண்பவருக்கு நோவினை ஏற்படுவதுபோல, அவர்களுக்கு அதன் வேதனை உண்டு) நீ அவ்வாறு இருக்கும் காலமெல்லாம், அல்லாஹ்வின் புறத்திலிருந்து உதவியாளர் (மலக்கு) உம்முடன் இருந்து கொண்டிருப்பார் எனப் பகர்ந்தார்கள். (முஸ்லிம்)

உறவைத் துண்டிப்பதின் தீய விளைவுகளை பின்வரும் நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன.

ஜுபைர் பின் முத்இம் (ரலி) அறிவிக்கிறார்கள். உறவைத் துண்டிப்பவர் சுவனத்தில் நுழையமாட்டார்.(புகாரி, முஸ்லிம்)



நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அபீ அவ்பா (ரலி) அறிவிக்கிறார்கள்: உறவைத் துண்டிப்பவர் உள்ள கூட்டத்தாரின் மீது அல்லாஹ்வின் அருட் கொடைகள் இறங்காது. (அதபுல் முப்ரது, பைஹகீ)

நபியவர்கள் நவின்றதாக அபூபக்கர் (ரலி) அறிவிக் கிறார்கள்: அநியாயம் செய்வது, உறவைத் துண்டிப்பது ஆகிய பாவங்களைவிட மறுமையில் அவைகளுக்கு அல்லாஹ் சித்தப்படுத்தி வைத்துள்ள வேதனையுடன், உலகிலும் விரைந்து வேதனை கொடுப்பதற்கு தகுதி பெற்ற பாவங்களாக வேறு பாவங்கள் இல்லை. (திப்ரானி, அஹ்மது)

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைத்தபின் தங்கள் குடும்பத்தினர்களையும் நெருங்கிய உறவினர்களையும் அழைத்து (ஈமான் கொள்வதின் மூலம்) நரக நெருப்பைவிட்டு உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; அது உங்களது பொறுப்பாகும் என்ற கருத்தை எடுத்துரைத்துவிட்டு (எனினும்) எனக்கும் உங்களுக்கும் மத்தியில் இரத்த பந்த உறவுகள் உள்ளன; அவைகளை நான் பேணி வருவேன் எனப் பகர்ந்தார்கள். (ரியாளுஸ் ஸாலிஹீன்)

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஒருமுறை பட்டாடை அன்பளிப்பாக கிடைத்தது. அதனை அப்பொழுது இணைவைத்து வணங்குபவராக இருந்த தமது தாய்வழிச் சகோதரருக்கு அன்பளிப்பாகக்கொடுத்துவிட்டார்கள். (அதபுல் முப்ரது)

நாயகத்தோழர் ஹகீம் பின் ஹிஜாம் (ரலி) அவர்கள், இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னரேயே உறவினரை ஆதரித்தல், அடிமைகளை உரிமைவிடுதல், தானதர்மம் செய்தல் ஆகிய நற்பண்புகளை உடையவராக இருந்து வந்தார்கள். அதனால் அவர்களுக்கு ஈமான் கொள்ளும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்கினான். (அதபுல் முப்ரது)

உற்றாரைச் சேர்த்துக் கொள்வதென்பது அவர்களை நேசித்து வருதல், அவர்களை அடிக்கடி சந்தித்து வருவது, அவர்களுக்கு உதவி செய்து வருவது, குறிப்பாக அவர்களிலுள்ள ஏழை எளியோர்களுக்கு பொருளுதவி செய்வது, அவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவது அவர்களில் உடல்நலம் குன்றியவர்களிடம் சென்று உடல்நலம் விசாரிப்பது, அவர்களது கஷ்ட, நஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்வது, அவர்கள் வெளியூர்களில் இருந்தால் அவர்களுடன் கடிதத் தொடர்புகள் வைத்துக் கொள்வது, அவர்களுக்கு நல்லவைகளை எடுத்துச்சொல்லி, தீமைகளை விட்டும் தவிர்ந்து கொள்ளச் செய்வது போன்றவைகளாகும்.

உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வது மேலான நற்பண்பாகும். அதன் மூலம் அன்பு பெருகும். இறையருள் பொழியும். விரோதங்கள் வேற்றுமைகள் விலகிச் செல்கின்றன.

அல்லாஹ், அனைவருக்கும் மேற்கண்ட நற்பண்புகளை அருள்வானாக!

## அண்டை வீட்டாருடன் நற்பண்புகள்

திருக்குர்ஆனின் ஸூரத்துன்நிஸா அத்தியாயத்தில் வல்ல ரஹ்மான் கூறுகிறான்:

அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எப்பொருளையும் இணை வைக்காதீர்கள். பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் நெருங்கிய அண்டை வீட்டுக்காரருக்கும், தூரத்து அண்டை வீட்டுக்காரருக்கும் நன்மை செய்து வாருங்கள். (அல்குர்ஆன் 4-36)

அண்டை வீட்டுக்காரர்கள் நமக்கு அருகாமையில், நமது சூழலில் வாழ்பவர்கள். அவசர ஆபத்தின்பொழுது நமக்கு விரைந்து உதவுபவர்கள்.

அண்டை வீட்டாருடன் நல்லுறவைப் பேணி வாழ்வதை இஸ்லாம் மிகவும் வலியுறுத்துகிறது. அப்பொழுது சமூகம்



முழுவதிலும் அமைதியும் நிம்மதியும் தவழும். ஒற்றுமையும் உறுதுணையும் பெருகும்.

நபியவர்கள் நவின்றதாக இப்னு உமர் (ரலி), அன்னை ஆயிஷா (ரலி) ஆகிய இருவரும் அறிவிக்கிறார்கள்: அண்டை வீட்டுக்காரரை வாரிசாக ஆக்கிவிடுவாரோ என நான் பயப்படுமளவு, ஜிப்ரயீல் (அலை) எனக்கு அண்டை வீட்டார் குறித்து தொடர்ந்து உபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். (புகாரி, முஸ்லிம்)

ஜாபிர் (ரலி) கூறுகிறார்கள்: ஒருவர் நபியவர்களிடம், தம் அண்டை வீட்டுக்காரர் குறித்து முறையிட்டு உதவி தேட வந்தார் வந்தவர் கஃபாவின் ருக்னுக்கும், மகாமு இப்ராஹீமுக்கும் மத்தியில் அமர்ந்து (நபியவர்களின் வருகையை) எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது நபியவர்கள் முன்னோக்கி வந்தார்கள். அவர்களை அவர் பார்த்தார். அப்பொழுது மகாமு இப்ராஹீமுக்கு அருகில் ஜனாசாக்கள் தொழ வைக்கப்படுகின்ற இடத்தில் வெள்ளை உடுப்பு அணிந்த ஒருவரிடம் நபியவர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர் நபியவர்களிடம் "அல்லாஹ்வின் திருத்தூதரே! என் தாயும், தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! வெண் உடுப்பு உடுத்தியவராக தாங்களுடன் நின்று (பேசிக் கொண்டிருந்த) ஒரு மனிதரை நான் பார்த்தேன். அவர் யார்? என வினவினார். அதற்கு நபியவர்கள், அவரை நீர் பார்த்தீரா? என வினவ, அவர் ஆம் எனக் கூறவே, "நீர் அதிகமான நலவை பார்த்து விட்டீர். அவர்தான் ஜிப்ரயீல். என் ரப்பின் தூதர், அண்டை வீட்டுக்காரரை வாரிசாக்கி விடுவாரோ என நான் எண்ணும் அளவு அண்டை வீட்டுக்காரரைப் பற்றி எனக்கு உபதேசித்தார்கள் எனப் பகர்ந்தார்கள். (அதபுல் முப்ரது)

அண்டை வீட்டாருக்கு நன்மை செய்து வருவது முஃமினின் பண்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை

கொண்டவர் தம் அண்டை வீட்டாருக்கு நன்மை புரியட்டும் என நபியவர்கள் பகர்ந்தார்கள் (முஸ்லிம்)

மற்றொரு மணிமொழியில், அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர், தம் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தரமாட்டார் என நபியவர்கள் பகர்ந்தார்கள் (புகாரி, முஸ்லிம்)

அண்டை வீட்டாருக்கு உணவு, உடை விஷயத்தில் நம்மால் இயன்றளவு உதவி வர வேண்டுமென பின்வரும் நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன.

நபியவர்கள் நவின்றதாக அபூதர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நீர்-சால்னா (குழம்பு) காய்ச்சினால் அதன் தண்ணீரை அதிகப்படுத்துவீராக! உம் அண்டை வீட்டுக் காரரை (அதனை வழங்குவதின் மூலம்) கவனித்துக் கொள் வீராக! எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

யார் தம் அண்டை வீட்டுக்காரர் பட்டினியாக உள்ளார் என்பதை அறிந்தும், (அவருக்கு ஏதும் உதவாமல்) அவர் மட்டும் வயிறு நிரம்பியவராக இரவைக் கழிப்பாரோ அவர் என்னைக் கொண்டு (பரிபூரண) ஈமான் கொண்டவராக ஆகமாட்டார் என நபி!'யவர்கள் கூறினார்கள்.

(திப்ரானி, பஜ்ஜார்)

ஒரு மனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம், எனக்கு ஏதேனும் ஆடை வழங்குவீர்களாக! எனக் கேட்டார். அதற்க வர்கள் மறுமொழி ஏதும் கூறவில்லை (அவர்களிடம் மேல் மிச்சமான ஆடைகள் எதுவும் அப்பொழுது இல்லாமலி ருந்திருக்கலாம்) பின்னர் மீண்டும் அவர் வந்து ஆடை கேட்டார். அப்பொழுது, 'இரண்டு ஆடைகளுக்கு, மேல் மிச்சமாக ஆடைகள் உள்ள அண்டை வீட்டுக்காரர் உமக்கு உள்ளாரா? என வினவினார்கள். அதற்கவர், பலர் உள்ளார் கள் எனக் கூறினார். அதற்கவர்கள் "அவ்வண்டை வீட்டுக் காரருக்கும் உமக்கும் மத்தியில் சுவனத்தில் அல்லாஹ்



சேர்த்து வைக்காமல் போவானாக! எனக் கூறினார்கள்.

(திப்ரானி பில் அவ்ஸத்தி)

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓ முஸ்லிமான பெண் மணிகளே! ஓர் அண்டை வீட்டுக்காரப் பெண், மற்றோர் அண்டை வீட்டுக்ககாரப் பெண்ணுக்கு (தான் வழங்கும் அன்பளிப்பை) லேசாக எண்ணி (வழங்காமல் இருந்து)விட வேண்டாம்! ஓர் ஆட்டுக்கால் குளம்பாகிலும் சரியே!

(புகாரி, முஸ்லிம்)

அண்டை வீட்டாருக்கு நன்மை செய்து வருவதென்பது, அவர் தேவையானால் அவருக்கு உதவி செய்வது, அவர் நோய்வாய்ப்பட்டு விட்டால் அவரை உடல் நலம் வினவுவது, அவருக்கு சோதனைகள், கஷ்டங்கள் வந்து விட்டால் அவருக்கு ஆறுதல் கூறுவது, அவருக்கு நன்மை கள் கிடைத்துவிட்டால் அவருக்கு வாழ்த்துக் கூறுவது, அவரைக் காணும்பொழுது புன்முறுவல் பூப்பது, அவரை காணவில்லை என்றால் அவரைப் பற்றி விசாரிப்பது, அவர் வழி தவறிவிட்டால் அவருக்கு நேர்வழி காட்டுவது, அவரது நற்பண்புகளை பரப்புவது, அவரது குறைகளை மறைத்துக் கொள்வது, அவர் மரணித்துவிட்டால் அவரது ஜனாசாவை பின்தொடர்ந்து சென்று நல்லடக்கத்தில் கலந்து கொள்வது, அவர் பிள்ளைகளின் மீது இரக்கம் காட்டுவது போன்ற வைகளாகும். (அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

அண்டை வீட்டுக்காரருக்கு இடையூறு அளித்துவருபவர் பரிபூரண மு'ஃமின் அல்ல; குறைவான ஈமானை உடையவர் என பின்வரும் நபிமொழி எடுத்துரைக்கிறது.

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் ஈமான் கொண்டவனாக ஆக மாட்டான் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மும்முறை கூறினார்கள். அல்லாஹ்வின் திருத்தூதரே! அவன் யார் என வினவப்பட்டது. அதற்கவர்கள், 'எவனது கெடுதல்களை

விட்டும் அவனது அண்டை வீட்டார் நிம்மதி அடைய வில்லையோ அவன்தான் என பதிலளித்தார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், "எவனது கெடுதல் களை விட்டு அவன் அண்டை வீட்டார் நிம்மதியுற வில்லையோ அவன் சுவனத்தில் நுழையமாட்டான்" எனக் கூறப்பட்டுள்ளது.

தமது வீட்டின் கழிவு நீரை அண்டை வீட்டிற்கு செல்ல வைப்பதோ, அல்லது தம் வீட்டுப்புகையால் அவர்களை நோவினைப் படுத்துவதோ அல்லது பெரும் கூச்சல்கள் இரைச்சல்களால் அவர்களின் உறக்கம், ஓய்விற்கு தொந்தரவு அளிப்பதோ கூடாது. அவர்கள் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் கட்டத்தில் தமது வீட்டில் மகிழ்வான விசேஷங்களை கொண்டாடாமல் இருப்பது நலமாகும்.

மேலும் அவர்களைத் திட்டுவதோ, ஏசுவதோ அவர் களின் பிரத்தியேக விஷயங்களில் தலையிடுவதோ அவர்கள் குடும்பத்தினருக்கும் குழந்தைகளுக்கும் இடையூறு அளிப்பதோ கூடாது.

தமது ஆடை அணிகலன்கள், உணவு வகைகள், வேறு வகைச் செல்வங்களைக் கொண்டு அவர்களிடம் பெருமை அடிக்கலாகாது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இரு பெண்களைப் பற்றிக் கூறப்பட்டது. ஒரு பெண் இரவில் நின்று வணங்கு கிறாள். பகலில் நோன்பு நோற்கிறாள். எனினும் தன் நாவால் அண்டை வீட்டாரைத் துன்புறுத்துகிறாள் எனத் தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் அவளில் நலவில்லை; அவள் நரகவாசி எனப் பகர்ந்தார்கள். பின்னர், இன்ன பெண் பர்லான தொழுகைகளை மட்டும் தொழு கிறாள்; ஆடைகளை தர்மம் செய்கிறாள்; யாருக்கும் இடையூறு அளிப்பதில்லை எனக் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் "அவள் சுவனவாசி" எனப் பகர்ந்தார்கள்.

(அதபுல் முப்ரது)



நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக் கிறார்கள்: தமது சுவரில் அண்டை வீட்டுக்காரர் மூங்கில் பதிப்பதைத் தடுக்க வேண்டாம். (புகாரி, முஸ்லிம்)

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கிறார்கள்: யார் தம் அண்டை வீட்டாரிடம் சிறந்தவராகத் திகழ்கிறாரோ அவரே அல்லாஹ்வித ஆலாவிடம் சிறந்தவராவர். (திர்மிதி)

அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் நபியவர்களிடம் 'அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் நன்மை செய்து வந்தேன் அல்லது தீமை செய்து வந்தேன் என்பதை நான் எவ்வாறு அறிந்து கொள்வேன் எனக் கேட்டார். அதற்கவர்கள், உம் அண்டைவீட்டார்கள் நீ நன்மை செய்து வந்தாய் எனக் கூறுவதை நீ கேட்பா யானால் (உண்மையில்) நீ நன்மை செய்துவிட்டாய். உம் அண்டை வீட்டுக்காரர்கள் நீ தீமை செய்து வந்தாய் என்று கூறுவதை நீ கேட்பாயானால் (உண்மையில்) நீ தீமை செய்துவிட்டாய் எனப் பகர்ந்தார்கள். (இப்னு மாஜா)

அண்டை வீட்டாருக்கு நன்மை செய்து நற்பெயர் பெறு வதின் முக்கியத்துவத்தை இந்நபிமொழியில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

தம் அண்டை வீட்டாருக்கு நம்பிக்கை துரோகம் செய்பவர் மாபெரும் குற்றவாளியாவார். "தம் அண்டை வீட்டுக்காரரின் மனைவியுடன் விபச்சாரம் செய்பவனின் பாவம், வேறு பத்து பெண்களுடன் விபச்சாரம் செய்வதின் பாவத்தை விடக் கடுமையானது; தம் அண்டைவீட்டில் திருடுபவனின் பாவம், வேறு பத்து வீடுகளில் திருடுவதின் பாவத்தை விடக் கடுமையானது" என்ற கருத்து ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. (அதபுல் முப்ரது)

ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்கள், தங்கள் அண்டை வீட்டாருக்கு உதவி, அவர்களைக் கண்ணியப்படுத்தும்

பண்பு கொண்டவர்கள். ஒருநாள் அவரது அண்டை வீட்டுக்காரர் தமது அவசியத் தேவையை முன்னிட்டு தமது வீட்டை விற்பனை செய்ய நாடினார். அதனை வாங்க முன் வந்தவரோ, அவ்வீட்டிற்கு ஒரு லட்சம் திர்ஹம் மட்டுமே மதிப்பிட்டார். அதனைக் கண்ட அவ்வீட்டுக்காரர், "ஸயீத் பின் ஆஸை அண்டை வீட்டுக்காரராகக் கொண்ட இவ்வீட்டிற்கா இவ்வளவு குறைவான விலையை மதிப்பிடுகிறீர்! நிச்சயமாக நான் இவ்வீட்டை விற்க மாட்டேன்; இதனை விற்பதின் மூலம் ஒரு உன்னதமிகு சங்கைமிகு மனிதரின் அருகாமையை நான் இழக்க நேரிடும். அதனை நான் விரும்பவில்லை; மக்களுக்கு உதவுவதையே அவர் எப்பொழுதும் விரும்புவார்; என்னைப் பார்த்தால் என்னை வரவேற்பார்; என்னைக் காணவில்லையென்றால் என்னைப் பற்றி விசாரிப்பார்; நான் ஏதேனும் கேட்டால் கொடுப்பார்" எனக் கூறினார்.

இச்செய்தி ஸயீத் பின் ஆஸ் அவர்களை அடையவே, அவருக்கு அவ்வீட்டின் கிரயத் தொகையைக் கொடுத்து விட்டு அவரை அவ்வீட்டிலேயே குடியிருக்கச் செய்தார்கள்.

(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் இரவு காலங்களில் விழித்திருந்து வணக்கங்களிலும் திருக்குர்ஆன் ஓதுவதிலும் ஈடுபடுவார்கள். அவர்களின் அண்டை வீட்டுக்காரர்களில் ஒருவன், இரவு முழுவதும் புலம்பிக் கொண்டும், உயர்ந்த சப்தத்தில் கவிதைகள் படித்துக்கொண்டும் இருப்பான். தான் ஒரு வீரனென்றும், தனது வீரத்தை தன் கூட்டத்தினர் பயன் படுத்திக்கொள்ளவில்லை என அக்கவிதைகளில் கூறிக் கொண்டிருப்பான்.

அவனது செயல்களின் காரணமாக இமாமவர்களின் வணக்கங்களுக்கு இடையூறு ஏற்பட்டாலும், அதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஒருநாள் அவனது சப்தம் கேட்காது போகவே, அவனைப் பற்றி விசாரித்



தார்கள். இரவுக் காலங்களில் அவன் சப்தம் போட்டுக் கொண்டிருப்பதால், நகரக் காவலர்கள் அவனை பிடித்துச் சென்றுவிட்டார்களெனத் தெரியவந்தது. உடனே, இமாம வர்கள் நகர ஆளுனரிடம் சென்று, அவனுக்காக பரிந்துரை செய்து அவனை விடுவித்து வந்தார்கள்.

பின்னர், அவனிடம் நீர் உமது கவிதைகளில் கூறியது போன்று, நாம் உம்மை வீணாக்கி விட்டோமா? எனக் கேட்டார்கள். அதற்கவன் வெட்கமடைந்து, "நீர் உம் அண்டை வீட்டாரின் கடமைகளை நிறைவேற்றி விட்டீர் எனக் கூறினான்.' பின்னர் அம்மனிதன் தவ்பா செய்து அச்செயலைவிட்டு நீங்கினான்.

(அல் இஸ்லாம் வ உஸ்ரத்துல் அரபிய்யா)

விஸ்தீரணமான வீடு, நல்ல அண்டை வீட்டுக்காரர், இலகுவான வாகனம் ஆகியவை முஸ்லிமான மனிதரின் நற்பேறுகளில் நின்றுமுள்ளவைகளாகும் என அண்ணல் நபி (ஸல்) ஒரு மணிமொழியில் கூறியுள்ளார்கள்.

(அறிவிப்பாளர்: நாபிஃபின் அப்தில் ஹாரிஸ் அதபுல் முப்ரது)

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம், இறைத்தூதரே! எனக்கு இரு அண்டை வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள். அவ்விரு வீட்டார்களில் எவ்வீட்டாருக்கு அன்பளிப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டேன். அதற்கு நபி அவர்கள், "அவ்விரு வீடுகளில் தலைவாயில் மிகச் சமீபமாக உள்ள வீட்டாருக்கு" எனப் பகர்ந்தார்கள். (புகாரி)

அண்டை வீடு என்பது, முன்னால் நாற்பது வீடுகள், பின்னால் நாற்பது வீடுகள், வலது புறத்தில் நாற்பது வீடுகள், இடது புறத்தில் நாற்பது வீடுகள் ஆகும் என ஹஸன் பஸரீ (ரஹ்) கூறுகிறார்கள். (அதபுல் முப்ரது)

அண்டை வீடு நாற்பது வீடுகள் வரை உள்ளன என இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறுகிறார்கள்.(ஹாஷியத்து ஜலாலைன்)

ஒரு பள்ளியில் தொழுகும் மஹல்லவாசிகள் அனைவரும் அண்டை வீட்டார்கள் ஆவார்கள் என இமாம் அபூயூசுப் (ரஹ்), இமாம் முஹம்மது (ரஹ்) ஆகியோர் கூறுகிறார்கள்.

(ஹாஷியத்து ஜலாலைன்)

தமது உபகாரங்களை தூரமான அண்டை வீட்டார்களுக்கு முன்பாக, அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கே முதலில் செய்வார் என நாயகத்தோழர் அபூஹுரைரா (ரலி) கூறுகிறார்கள். (அதபுல் முப்ரது)

அண்டை வீட்டார்கள் மூன்று வகைப்படுகின்றனர்: (1) உறவினரான, முஸ்லிமான அண்டை வீட்டுக்காரர். அவர், அண்டை வீட்டின் உரிமை, உறவின் உரிமை, இஸ்லாத்தின் உரிமை ஆகிய மூன்று உரிமைகள் பெறுகிறார். (2) உறவினர் அல்லாத முஸ்லிமான அண்டை வீட்டுக்காரர். அவர் அண்டை வீட்டின் உரிமை, இஸ்லாத்தின் உரிமை ஆகிய இரு உரிமைகளைப் பெறுகிறார். (3) உறவினரும் அல்லாத, முஸ்லிமும் அல்லாத அண்டை வீட்டுக்காரர். அவர், அண்டை வீட்டின் உரிமை என்ற ஓர் உரிமையைப் பெறுகிறார். இது விபரம் தப்ஸீர் அஹ்மதியில் கூறப்பட்டுள்ளது.

(ஹாஷியத்து ஜலாலைன்)

அண்டை வீட்டாருடன் நற்பண்புகளை கடைப்பிடித்து வாழ அல்லாஹ் அருள்புரிவானாக!

## ஆசிரியர்-மாணவர் கடமைகள்

ஆசிரியர்கள் சமுதாயத்தின் ஒளிவிளக்குகள் ஆவார்கள். குழந்தைச் செல்வங்கள், பெற்றோருக்குப் பின் ஆசிரியர்களின் அரவணைப்பிலேயே வளர்கின்றனர். அவர்களிடமே அதிகத் தொடர்புகள் கொள்கின்றனர்.

பூமி சூரியனிடமிருந்து ஒளிபெறுவது போல, மாணவர்கள் ஆசிரியர்களிடமிருந்து ஒளி பெறுகின்றனர்.

ஒரு சீரான நல்லொழுக்கம் நிரம்பிய சமுதாயம் அமையப் பெற ஆசிரியர்கள் அடித்தளமாகத் திகழ்



கிறார்கள். அதன் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அவர்களது பணி அத்தியாவசியமானதாகும்.

அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் தாங்கள் இவ்வுலகிற்கு வந்தது போதனையாளராகத்தான் எனக் கூறி அப்பணியின் பெருமைதனை போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கிறார்கள்: நான் (இவ்வுலகிற்கு) அனுப்பப்பட்டதெல்லாம், கற்றுக் கொடுப்பவராகத்தான். (தாரமீ)

கல்வி மூலம் ஆசிரியர் மாணவர்களுக்குச் செய்யும் உதவி, உதவிகளில் பேருதவியாய்த் திகழ்கிறது. அவர்கள், அவர்களது அறியாமை இருளைப் போக்குகிறார்கள். அவர்களை உயர் அந்தஸ்து பெறுபவர்களாக உருவாக்குகிறார்கள். மேலும் அடுத்த தலைமுறையின் வழிகாட்டிகளாக அவர்களை ஆக்கிச்செல்கிறார்கள்.

அனஸ் பின் மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் யார் மிக தயாளத்தன்மையுடையவர் என உங்களுக்குத் தெரியுமா? என வினவினார்கள். தோழர்கள், அல்லாஹ்வும், அவன் திருத்தூதருமே அதனை நன்கறிந்தவர்கள் என விடை பகர்ந்தார்கள். அதற்கவர்கள், அல்லாஹ் மிகுந்த தயாளன். அடுத்து ஆதமின் மக்களில் நான் மிக தயாளத்தன்மை உள்ளவன். அதன்பின் உங்களில் மிகுந்த தயாளத்தன்மை உடையவர். யார் கல்வியைக் கற்று பின்னர் அதனை கற்றுக் கொடுக்கிறாரோ அவராவார். அவர் மறுமை நாளில் அரசரைப் போன்று (கண்ணியமுடன்) வருவார். (பைஹகீ)

இங்கு கல்வி கொண்டு கருத்து “இல்முன் நாபிஃ” எனும் பயன் அளிக்கும் கல்வியாகும். இம்மை மறுமையின் நற்பேறுகளுக்கு பயன் வழங்காத உதவாக்கரைக் கல்விகளை இஸ்லாம் கல்வி எனக் கருதுவதில்லை. பயன் வழங்கும் கல்விகளிலேயே மிக மேலானதும், மிக உயர்வானதும் குர்ஆன், ஹதீஸின் கல்வியாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அப்துல் லாஹ் பின் மஸ்வூது (ரலி) கூறுகிறார்கள்: கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள்! (பின்னர்) அதனை மக்களுக்கு கற்றுக் கொடுங்கள். வாரிசுரிமை பங்கீடுகளை கற்றுக் கொண்டு அதனைக் கற்றுக்கொடுங்கள். குர்ஆனை கற்றுக் கொண்டு அதனைக் கற்றுக்கொடுங்கள். ஏனெனில் நான் கைப்பற்றப்படும் (மரணமாகும்) மனிதனாக உள்ளேன்.

(தாரமீ)

இறைத்தூதர்களான நபிமார்கள் கல்வியையே தங்களது அனந்தரச் சொத்துகளாக பூமியில் விட்டுச் சென்றுள்ளார் கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதனைக் குறித்து ஒரு மணிமொழியில்,

“இறைத்தூதர்கள், பொன் வெள்ளிக் காசுகளை தங்களது அனந்தரச் சொத்துக்களாக விட்டுச்செல்லவில்லை. எனினும் அவர்கள் (தீனின்) அறிவு ஞானத்தையே தங்களது அனந்தரச் சொத்துகளாக விட்டுச் சென்றார்கள். அதனை எடுத்துக் கொண்டவர் மாபெரும் நற்பேற்றை எடுத்துக் கொண்டவராவார் எனப் பகர்ந்தார்கள். (அஹ்மது, திர்மதி)

சொத்துக்களில் மிக மேலான சொத்தாகத் திகழும் அறிவு ஞானம் எவ்வளவு பெற்றாலும், இன்னும் பெற வேண்டிய அளவிடற்கரிய பொக்கிஷமாகும். அதனால்தான் அல்லாஹ் தன் அருள்மறையில் “ரப்பி ஜித்னீ இல்மன்” என் இரட்சகனே! என் அறிவுஞானத்தை மேலும் அதிகம் வழங்கிடுவாயாக” எனப் பிரார்த்திக்குமாறு பணிக்கிறான்.

மாணவ மணிகள் தங்கள் ஆசிரியர்களின் பேருதவியை நினைவு கூர்ந்து அவர்களிடம் எப்பொழுதும் மிகுந்த மரியாதையுடனும் நன்றியுணர்வுடனும் நடந்து கொள்வது அவசியமாகும். அல்லாஹ் தன் அருள்மறையில் “உபகாரத் திற்கு பகரம் உபகாரமாகவே உள்ளது” என ‘ஸூரத்து அர்ரஹ்மானில்’ குறிப்பிடுகிறான். ஆகவே அவர்களது வாழ்வில் பெற்றோருக்கு அடுத்தபடியாக, அவர்களுக்கு



மாபெரும் உபகாரம் செய்த ஆசிரியப் பெருந்தகைகள் மீது வாழ்நாள் முழுதும் அன்பு கொண்டவர்களாக, அவர்களை கண்ணியப்படுத்துபவர்களாக, அவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் செய்து வருபவர்களாக, அவர்களுக்காக அல்லாஹ் தஆலாவிடம் துஆ பிரார்த்தனை இறைஞ்சி வருபவர்களாக இருந்து வருதல் வேண்டும்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பிற்காலத்தில் தங்கள் ஆசிரியர் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் விளக்கங்களை எடுத்துச் சொல்ல வேண்டி வந்தால் “கால உஸ்தாதுனா மாலிக்குன்” எங்கள் ஆசிரியர் மாலிக் கூறினார்கள் என பெருமிதத்துடனும், கண்ணியத்துடனும் கூறுவார்கள்.

(இக்மால் பீ அஸ்மாஇர் ரிஜால்)

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள், தங்கள் ஆசிரியர் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்கு அதிகம் துஆ செய்து வருபவர்களாக இருந்தார்கள். ஒருநாள் அவர்களது புதல்வர் அப்துல்லாஹ் பின் அஹ்மது பின் ஹன்பல், தம் தந்தையாரிடம், தாங்கள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர் களுக்கு அதிகம் துஆ செய்கிறீர்களே! என வினவினார். அதற்கவர்கள், இமாம் ஷாபிஈ, பகலிற்கு சூரியன் போன்றும் மக்களுக்கு ஆரோக்கியம் போன்றுமுள்ளவர்கள் எனப் பகர்ந்தார்கள். (இக்மால் பீ அஸ்மாஇர் ரிஜால்)

அல்லாஹும்மஃபிர்லீ, வலிவாலிதய்ய, வலிமுஹம்மது பின் இத்ரீஸிஸ் ஷாபிஈ-இறைவா! எனக்கும் எமது பெற் றோருக்கும், (எமது ஆசிரியர்) முஹம்மது பின் இத்ரீஸிஸ் ஷாபிஈ அவர்களுக்கும் பிழைபொறுப்பாயாக! என என் தொழுகைகளுக்குப் பின் நான் அவர்களுக்கு துஆ செய்வேன் என இமாம் அஹ்மது பின் ஹன்பல் அந்த துஆவை விவரித்து மேலும் கூறுகிறார்கள்.

(இக்மால் பீ அஸ்மாஇர் ரிஜால்)

நான் முப்பது ஆண்டுகளாக (எனது ஆசிரியரான) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்கு துஆ செய்யாமல்

உறங்குவதில்லை என இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) கூறுகிறார்கள். (வபயாத்துல் அஃயான் இப்னு கல்கான்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் "ஒருவர் உங்களுக்கு உபகாரம் செய்தால், அவருக்கு பிரதி உபகாரம் செய்துவிடுங்கள்! அதனை (அதற்கான வசதியை) நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையெனில், அவருக்கு நீங்கள் பிரதி உபகாரம் செய்துவிட்டீர்கள் என்று கருதப் படுமளவு, அவருக்காக (அல்லாஹ் தஆலாவிடம்) துஆ செய்து விடுங்கள் எனப் பகர்ந்துள்ளார்கள்.

(அஹ்மது, அபூதாஊது, நஸயீ)

மாணவர்கள் தங்கள் ஆன்மீகத் தந்தைகளான ஆசிரியர் களிடம், அவர்களுக்கு முந்திக் கொண்டு பேசுவதோ, அவர் களது சப்தத்தை விட தங்களது சப்தத்தை உயர்த்திப் பேசு வதோ பண்பன்று. இதனை ஸூரத்துல் ஹுஜுராத்தின் ஆரம்ப வசனங்களின் விரிவுரையில் படிப்பினைக் கருத்து களாக திருக்குர்ஆனின் விரிவுரையாளர்கள் எடுத்துரைக் கிறார்கள்.

ஆசிரியர்கள் பாடம் நடத்தும் பொழுதும், பயிற்சி யளிக்கும் பொழுதும் சிந்தனைகளைச் சிதறவிடாமல் அவை களைக் கவனமுடன் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டும். அவைகளில் ஏதேனும் விளங்கவில்லையென்றால், அவை களை பண்புடன் ஆசிரியர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளவேண்டும். "நீங்கள் அறியாதவர்களாக இருந்தால், அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என அல்லாஹ் தனது அருள்மறையில் கூறுகிறான்.

நாயகத் தோழர்கள், தங்கள் தலைவரும் ஆசானுமான அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பேசினால், மிக உன்னிப் பாகவும் கவனமாகவும் கேட்பர். பல தோழர்கள் அப்பொன் மொழிகளை உடன் மனனம் செய்து கொள்வர். தூரத்தில் அமர்ந்துள்ள தோழர்கள் தங்கள் அருகிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள்.



மாணவர்கள், தங்கள் ஆசிரியர்கள் படித்து வரும்படியும், எழுதி வரும்படியும் கூறியுள்ள பணிகளை செவ்வனே செய்து அவர்களது கட்டளைகளை மதித்து வரவேண்டும்.

சில சமயம் ஆசிரியர்கள் கண்டிப்பு செய்தால் மாணவர் கள் அதனை தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அது அவர்களது நலன் கருதி அவ்வாசிரியர் எடுக்கும் தற்காலிக நிலையாகும். அதன் இறுதி அவர்களுக்கு இலாபமாகவே இருக்கும். தம் மக்கள் மீது பேரன்பு செலுத்தும் தந்தை, சிலவேளை அவர்களைக் கண்டிப்பதும் கோபிப்பதும் போன்றதுதான் இதுவும்.

மாணவர்கள் பாவங்களை விட்டு விலகியிருத்தல் அவசியமாகும். இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தங்கள் ஆசிரியர் வகீவு பின் ஜர்ராஹ் (ரஹ்) அவர்களிடம் தங்களது ஞாபக சக்திக் குறைவை முறையிட்டபொழுது, பாவங்களை விட்டு விலகியிருத்தல் வேண்டுமென்றும், கல்வி இறைவனின் ஒளி, அது பாவம் செய்து வருவோருக்கு கொடுக்கப்பட மாட்டாது எனக் கூறினார்கள்.

(தஃலீமுல் முதஅல்லிம்)

மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு மனமகிழ்வுடன் பணிவிடைகள் செய்தும், நற்பண்புகளுடன் நடந்தும் அவர்களது நல்லாசிகளையும், நற்பிரார்த்தனைகளையும் பெறவிழைதல் வேண்டும். அதனால் அவர்களது வாழ்வை செழித்தோங்கச் செய்வான். இன்றும் அதனை எத்தனையோ நல்லோர்களின் வாழ்வில் கண்கூடாகக் காண்கிறோம். "நெருக்கடியான கரத்துடனும் (ஏழ்மையுடனும்) பணி வுடனும், அறிஞர்களின் பணிவிடையுடனும் கல்வியை தேடியவர் வெற்றி பெற்றுவிட்டார் என இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறுகிறார்கள். (இக்மால் பி அஸ்மாஇர் ரிஜால்)

புகழ்பெற்ற அப்பாஸிய கலீஃபா ஹாரூன் ரஷீது தம் இருபுதல்வர்களில் ஒருவரை அஸ்மயீ என்ற பெரியாரிடம் கல்வி கற்க அனுப்பியிருந்தார். அப்பொழுது ஒருநாள் தம்

புதல்வரை பார்த்து வருவதற்காக கலீஃபா அங்கு வந்தார். அப்பொழுது ஆசிரியர் அஸ்மஈ ஒலூ செய்தவராக தம் காலைக் கழுவிக் கொண்டிருந்தார். அவரின் மாணவரான கலீஃபாவின் புதல்வர் அவருக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்.

இதனைக் கண்ணுற்ற கலீஃபா அவர்கள், ஆசிரியரை நோக்கி நான் என் மகனை தங்கள் சமூகம் அனுப்பி வைத்தது ஒழுக்கம் புகட்டுவதற்காகவே; அவ்விதமிருக்க, (தாங்கள் ஒலூ செய்யும்பொழுது) ஏன் அவரது ஒரு கையால் தங்களுக்கு தண்ணீர் ஊற்றவும், மறு கையால் தங்களது பாதத்தை கழுவிவிடவும் அவரை ஏவவில்லை? என சடைந்து கொண்டார். (தஃலீமுல் முதஅல்லிம்)

நமக்கு கல்வியமுதம் வழங்கிப் பேருதவி செய்த நம் ஆசிரியப் பெருந்தகைகளின் உள்ளங்களை நமது சொல்லால், செயலால் புண்படுத்தி விடலாகாது. அது நன்னெறியைச் சார்ந்ததன்று.

மாணவர்கள் தங்களுடன் பயிலும் சக மாணவர்களுடன் அன்புடனும், நற்பண்புகளுடனும் நடந்து கொள்ள வேண்டும். கல்வி போதனை மற்றும் அவசியத் தேவைகளின் பொழுது உதவி செய்தல், நல்லுபதேசம் புரிதல், இறை வணக்கங்களை நிறைவேற்றுதல் போன்ற நன்மையான காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிவர வேண்டும். "நன்மைக்கும் இறையச்சத்திற்கும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுங்கள்" என அல்லாஹ் தன் அருள்மறையில் எடுத்துரைக்கின்றான்.

ஆசிரியர்கள், மாணவர்கள் மீது அன்பும் இரக்கமும் அக்கரையும் உடையவர்களாகத் திகழவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: நம் சிறுவர் மீது இரக்கம் காட்டாதவரும், நம் பெரியவரை கண்ணியப்படுத்தாதவரும் நம்மைச் சார்ந்தவரல்ல. (திர்மிதி)



கல்வி புகட்ட அன்பும், இரக்கமும் மிகத் துணையாகத் திகழ்கிறது. தன் அருள்மறையில் 'அர்ரஹ்மான் அல்லமல் குர்ஆன்' மிகக் கிருபையுள்ள நாயன் - குர்ஆனைக் கற்றுக் கொடுத்தான் என அல்லாஹ் கூறுகிறான். கற்றுக் கொடுக்கும் விஷயத்தைக் கூறும்பொழுது தனது பல்வேறு தன்மைகளில் கிருபை என்ற தன்மையை அல்லாஹ் இணைத்துக் கூறுகிறான்.

மேலும் ஆசிரியர்கள், தங்கள் மாணவர்கள் நன்றாக விளங்கும் வண்ணம் நிதானமாகவும் தெளிவாகவும் போதனை செய்ய வேண்டும். அதற்காக ஒரே விஷயத்தை திரும்பக் கூறவேண்டி வந்தாலும் சடைவடைதல் கூடாது.

நாயகத் தோழர் ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்களின் பேச்சில் தெளிவும், விளக்கமும் இருக்கும். (அபூதாவூது)

நபியவர்கள் தங்கள் தோழர்களிடையே பேசும்பொழுது நிறுத்தி நிதானமாகப் பேசுவார்கள். அதனை சில தோழர்கள் அப்படியே மனனம் செய்து கொள்வார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் ஒரு விஷயத்தைப் பேசுவார்கள். அதன் ஒவ்வொரு பகுதிக்கும், அவர்களிடம் அமர்ந்திருப்போர் அதனைப் பாடமிட்டுக் கொள்ளும் அளவு இடைவெளி இருக்கும். (திர்மிதி)

ஆசிரியர்கள், தங்கள் மாணவர்களுக்கு நேரிய பாதையைக் காண்பித்து நன்மையை எடுத்தோதி, தீமையை விலக்கி வரவேண்டும்.

மாணவர்கள் கல்வியை அடைவதற்கு ஆறு விஷயங்கள் அவசியமென ஹஜ்ரத் அலி (ரலி) கூறுகிறார்கள். அவற்றி லொன்று ஆசிரியரின் நேர்வழி காட்டுதல் ஆகும். ஏனைய ஐந்து விஷயங்களாவன: மாணவரின் புத்திக்கூர்மை, கல்வியின் மீது பேராசை, பொறுமை, தேவையான செலவுத் தொகை, நீண்ட காலம். (தஃலீமுல் முதஅல்லிம்)